# வணிகத்தேடல்

## வணிக தினம் - 2012

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா.

B. Rajitha

# வணிகத்தேடல்

## வணிக தினம் - 2012

Vavuniya National College of Education

Be Explorer for Competency

**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**
**வவுனியா.**

# வணிக மன்றம்

மன்ற ஆலோசகர்: திரு.க.பேர்ணாட்
(பீடாதிபதி)

மன்றப் போசகர் : திரு.க.சுவர்ணராஜா
(விரிவுரையாளர், இணைப்பாளர்)

## உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.S.திவாகரன் |
| உபதலைவர் | : | செல்வி.T.சிந்துஜா |
| செயலாளர் | : | செல்வி.P.ரோகினி |
| உபசெயலாளர் | : | திரு.J.உமேஸ் |
| பொருளாளர் | : | செல்வி.T.வினோதினி |
| பத்திராதிபதி | : | திரு.A.லக்ஷ்மிநாதன். |



# வர்த்தகப் பிரிவு



# பீடாதிபதியின் ஆசிகள்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் வணிகத்துறை மாணவ ஆசிரியர்கள் முதல் தடவையாக வெளியிடுகின்ற "வணிகத் தேடல்" சஞ்சிகை குறித்து எனது நல்லாசிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் வணிக ஆசிரியர்களுக்கான பயிற்சி 2011ம் ஆண்டிலிருந்து முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இவ்வாண்டில் (2012) அத்தொகுதி மாணவ ஆசிரியர்கள் எடுத்திருக்கின்ற இம்முயற்சியானது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முயற்சிகளுக்கு நம்பிக்கையளிக்கின்றது. ஆசிரியர் கல்வியானது தனியே பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் செயற்பாடுகளாக மட்டுமன்றி பல தரமான செயற்பாடுகளினூடாக ஆளுமை மிக்க வினைத்திறன் மிக்க தரமான ஆசிரியர்களை உருவாக்கும் முயற்சியில் மாணவ ஆசிரியர்களது படைப்பாற்றல்களை ஊக்குவிக்க சஞ்சிகைகள் மூலம் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கைக்கு "வணிகத்தேடல்" சஞ்சிகை வலுவூட்டுவதாக அமைகிறது.

வணிக மாணவர்கள் தங்களது அறிவுத் தேடல்களை ஆக்கங்களாக படைத்து "வணிகத்தேடல்" சஞ்சிகைக்குள் அடக்க கருதுகின்றமை வணிக மாணவ ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லா மாணவ ஆசிரியர்களுக்கும் உதவக் கூடியதாக அமையும் என நம்புகின்றேன்.

வணிகத்துறை மாணவ ஆசிரியர்கள் இது போன்ற ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு தம்மை வெளிப்படுத்த முயற்சிக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

க.பேர்ணாட்
பீடாதிபதி,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

# உப பீடாதிபதியின் ஆசிகள்

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்றும், கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்றும் நம்முன்னோர்கள் எமக்கு அறிவுறுத்தியுள்ளனர். இவை இருநோக்கு கொண்ட கூற்றுக்களாகும்.

எப்பாடுபட்டாவது பொருளீட்டல் வேண்டும் என்ற சிந்தனையும், எவ்வளவு பொருளை இழந்தும் கல்வியைப் பெற்றுக்கொள் என்பதும் எவ்வளவுக்கு ஒத்துப் போகக் கூடியன என்பன கவனத்துக்குரியது.

தற்போதைய சமூக நிலையில் கற்பதற்கு மிகை வருமானம் அவசியமென்ற கருத்தும், கல்வி பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் என்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்கவையே.

கல்வி கற்ற ஒருவன் கல்வியைத் தேடும் போது நியாய சிந்தனை, பொருளை அதர்மமாக செலவிடும் தன்மை, பொருளாளல் பிறர்க்கு உதவக்கூடிய தோற்றப்பாடுகளை எதிர்பாக்க முடியும். இதனால் தான் திருவள்ளுவரும்,

"நல்லார் கண்பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார் கண்பட்டதிரு" என்றார்.

நல்லவர்கண் வறுமை வருவது கொடியது. அதனைவிடக் கொடியது கல்லாதவனிடம் கிடைக்கும் செல்வம் என்பதாம்.

இதற்கு மாறுபட்டு அதே திருவள்ளுவர்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
பாடல்ல மற்றுப்பிற" என்கின்றார்.

கல்வியும், செல்வமும் இணையும் போது சமூக மலர்ச்சி நிறையும், விழுமியப் பண்புகள் நிறைந்த மனித சமுதாயம் வளரும். வணிகத்தேடல் சமூக நன்மைக்காகட்டும். ஆசிகள் பல.

கு.சிதம்பரநாதன்,
உபபீடாதிபதி,
(கல்வியும் தரமேம்பாடும்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

# உப பீடாதிபதியின் ஆசிகள்

வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் வர்த்தகப் பிரிவு மாணவ ஆசிரியர்களின் முயற்சியால் வெளியிடும் 2012 ஆண்டிற்கான "வணிகத்தேடல்" என்னும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவர்களின் முயற்சி வரவேற்கத்தக்கது. இதனூடாக ஒவ்வொருவரும் சஞ்சிகை வெளியிடும் ஆற்றலை வளர்த்து எதிர்காலத்தில் தனித் தனியா சஞ்சிகைகள் வெளியிட வாழ்த்துகின்றேன்.

இத்தகைய நிகழ்வுகளுக்கு ஆதரவு நல்கும் பீடாதிபதி அவர்களுக்கும், வர்த்தகப் பிரிவினரை வழிநடத்தும் பொறுப்பு விரிவுரையாளர் திரு.க.சுவர்ணராஜா ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

S.சஹாப்தீன்,<br>
உப பீடாதிபதி.<br>
(நிதி நிர்வாகம்)<br>
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,<br>
வவுனியா.

# மன்றப் போசகரின் ஆசிகள்

"ஆர்வம் வளர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.
நம்பிக்கையைப் போல
ஆர்வம் சேமிக்கப்பட வேண்டும்
தண்ணீரைப் போல"

ஆர்வத்துடன் கூடிய கடின உழைப்பும் முயற்சியுமே வாழ்க்கையின் உயர்ந்த இடத்தில் ஒருவரைக் கொண்டு செல்கின்றது.

ஆசிரியத்துவம் என்பது ஆர்வமிகு ஒரு பணியாகும். ஆர்வமானது ஓடுகின்ற நதியைப் போல தன்னையும் சுற்றி இருப்பவர்களையும் வளமாக்கும் ஒரு விடயமாகும்.

ஆர்வம் என்பது வெற்றிக்கு தேவையான குறிக்கோள், விடாமுயற்சி, கடின உழைப்பும், மன உறுதி என்று அத்தனை பண்புத்திறன்களையும் ஆர்வம் தூண்டுகின்றது எனலாம்.

வணிகப் பிரிவு மாணவர்களின் தொடர்ச்சியான ஆர்வம், கடின உழைப்பு என்பவற்றின் பலனாக வெளிவரும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். வணிக்கல்வி பிரிவு மாணவர்கள், கற்றலிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும், கல்லூரியின் சுற்றாடல் பாதுகாப்பில் காட்டும் கடின உழைப்பின் பயனாக அவர்களிடம் எழுந்துள்ள குழு உணர்வு, கூட்டுறவு மனப்பாங்கு ஆக்கத்திறன் என்பன அவர்கள் நடத்தவிருக்கும் வர்த்தக மன்ற செயற்பாடுகளிலும் இனிவரும் காலங்களிலுள்ள செயற்பாடுகளிலும் நன்றாக மிளிர வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

வாழ்த்துக்கள்

க.சுவர்ணராஜா
விரிவுரையாளர்,
இணைப்பாளர் (நிதி நிர்வாகம்),
போசகர்-வணிகமன்றம்.

# இதழாசிரியரின் உள்ளக்கிடக்கை

கணினி யுகமும் தொழிநுட்பத்திறனும் வளர்ச்சியுற்ற இவ்வுலகில் வணிகத்துறையும் தனக்கான ஓர் இடத்தை தக்க வைத்திருக்கின்றது. அவ்வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதல் வர்த்தகப் பிரிவு மாணவராகிய எமது முதல் படைப்பாகிய "வணிகத்தேடல்" சஞ்சிகை வெளியாகவுள்ளது.

இச்சஞ்சிகையில் கட்டுரைகள், செய்திகள் போன்ற வணிகத்துடன் தொடர்புடைய பல தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இச்சஞ்சிகை வெளிவருவதற்காக பாடுபட்டுழைத்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் இது போன்ற பல படைப்புக்கள் இம்மன்றத்தால் வெளிவர இறைவனின் ஆசி வேண்டி நிற்கின்றேன்.

திரு.அ.லக்சுமிநாதன்,
பத்திராதிபதி,
வணிகமன்றம்.

# தலைவரின் உள்ளத்திலிருந்து

இன்றைய உலகம் 21ம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் மிகவும் முன்னேறி வருகின்றது. உலக நாடுகளிடையே வர்த்தகத் தொடர்புகளும், தகவல் பரிமாற்றங்களும் மின்னல் வேகத்தில் விரிவுபட்டு வருகின்றது.

இவ்வகையில் எமது மன்றம் "வணிகத் தேடல்" என்ற சஞ்சிகையை வெளியிடுவதில் பெரும் மனமகிழ்ச்சி அடைகின்றது. எமது கல்லூரியின் வரலாற்றில் முதன்முதலாக வர்த்தகப்பிரிவு 2011ல் ஆரம்பிக்கப்பட்டு அப்பிரிவினரால் உருவாக்கப்படும் கன்னிப் படைப்பு இந்நூலாகும்.

எமது கல்லூரியின் பீடாதிபதி, உபபீடாதிபதிகள், உதவியர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் அனைவரின் ஒத்துழைப்புடன் இவ்விதழ் வெளியாகின்றது.

வணிகத்தேடல் யாவருக்கும் பயனளிப்பதாய் பிரகாசிக்க இறைவனை வேண்டுகின்றேன்.

திரு.S.திவாகரன்,<br>
தலைவர்,<br>
வணிகமன்றம்.

## செயலாளர் உள்ளத்திலிருந்து...

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் மன்றச் செயற்பாடுகளுள் வணிக மன்றமும் தனது செயற்பாட்டின் பிரதிபலிப்பாக வணிக விழா நிகழ்வை ஒழுங்கமைத்துள்ளது. இந்நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக "வணிகத்தேடல்" எனும் சஞ்சிகையும் வெளியிடுகின்றது.

எமது மன்றச் செயற்பாடுகளுக்கு மன்றப்போசகரின் ஊக்கப்படுத்தல்களும் அறிவுரைகளும் பெரும் உறுதுணையாக அமைகின்றது.

இவ்வணிகவிழா சிறந்த முறையில் நடந்தேற உதவிய பீடாதிபதி, உபபீடாதிபதிகள், விரிவுரையாளர், இணைப்பாளர், ஆசிரிய கல்வியியலாளர்கள், ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும் மன்றம் சார்பான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் "வணிகத்டேல்" சஞ்சிகை வெளியீட்டிற்கான ஆக்கங்களைத் தந்துதவிய வர்த்தகப் பிரிவு ஆசிரிய மாணவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்வி.P.ரோகினி,
செயலாளர், வணிக மன்றம்.

# இலங்கையின் பங்குச் சந்தை
# Stock Market in Sri Lanka

ஒரு நாட்டின் பங்குச் சந்தையானது அந்நாட்டின் (பொருளாதாரத்தை) அபிவிருத்தி, பொருளாதாரம் என்பவற்றை பிரதிபலிக்கும் முதன்மைக் குறிகாட்டியாக (Primary Indicator) விளங்குவதுடன் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை உருவாக்குகின்ற ஒரு அமைப்பாகும். தற்போது கொழும்புப் பங்குச் சந்தை தொடர்பில் பொது மக்களின் ஆர்வம் பெருமளவு அதிகரித்து வருவதுடன் பங்குச் சந்தையின் படிப்படியான வளர்ச்சி, அதன் தற்போதைய செயலாற்றுகை, ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை அளவிடுகின்ற போது பங்குச் சந்தை எவ்வளவு தூரத்திற்கு தீர்க்கமான காரணியாக உள்ளது என்ற விடயம் மற்றும் பொருளாதாரம் தொடர்பில் பங்குச் சந்தையின் முக்கியத்துவம் பற்றி ஆராய்வது கொழும்பு பங்குச் சந்தை உலகில் அதியுயர் செயலாற்றுகையைப் பிரதிபலிக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் காலத்திற்கு பொருத்தமானதாகும்.

### பங்குச் சந்தைக்கோர் அறிமுகம்
### An Introduction to the stock Market

பிரதான ஏற்றுமதிப் பயிரான கோப்பிக்கு பதிலாக தேயிலை பயிர்ச் செய்கைக்கான நிதியத்தினை திரட்டும் பொருட்டு கொழும்பிலும் இலண்டனிலும் பொதுக்கம்பனிகளை பதிவு செய்து பொது மக்களுக்கு பங்குகள் வழங்குவதன் மூலம் தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு தேவையான மூலதனம் ஈட்டப்பட்டது. அதன் பெறுபேறாக 1896ம் ஆண்டு கொழும்பு பங்குச் சந்தை தோற்றம் பெற்றது.

முதலீட்டாளர்கள் பங்குகள், தொகுதிக்கடன்கள் அல்லது வேறு ஏதேனும் பிணையங்கள் கொள்வனவு செய்கின்ற விற்பனை செய்கின்ற இடம்/தளம் பங்குச் சந்தையாகும். அதாவது கம்பனிகளின் உரிமைத்துவமானது ஒரு முதலீட்டாளர்களிடமிருந்து இன்னொரு முதலீட்டாளர்களுக்கு சட்டரீதியாக மாற்றப்படும் தளம் பங்குச் சந்தையாகும்.

இலங்கையின் பங்குச் சந்தை செயற்பாடுகளை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் (Colombo Stock Exchange) பொறுப்பேற்று நிறைவேற்றுகின்றது. இந்நிறுவனமானது தனது சேவையினை நாடுபூராகவும் விஸ்தரிக்கும் நோக்கில் மாத்தளை, கண்டி, குருநாகல், நீர்கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் (April 2010) போன்ற பிரதேசங்களிலும் தனது கிளையினை விஸ்தரித்துள்ளது.

### கொழும்பு பங்குச் சந்தையின் தற்போதைய செயல்திறன்

- 2003ம் கொழும்புப்பங்குச் சந்தை உலகளாவிய ரீதியாக இரண்டாவது எழுச்சிபெறும் (Emerging Market) சந்தையாக பதிவு செய்யப்பட்டது.
- 2004ம் ஆண்டில் ஆசியாவின் செயல்திறன்மிக்க சந்தைகளில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டது.
- உலகளாவிய ரீதியாக நான்காவது செயல்திறன்மிக்க சந்தையாக 2005 தெரிவு செய்யப்பட்டது.
- 2005ல் 5வது தடவையாகவும் ஆசியாவின் செயல்திறன்மிக்க சந்தையாக பதிவு செய்யப்பட்டது.
- மீண்டும் உலகின் இரண்டாவது அதிசெயல்திறன்மிக்க சந்தைகளில் ஒன்றாக 2009ல் 126% வளர்ச்சியுடன் தெரிவு செய்யப்பட்டது.
- மீண்டும் உலகின் இரண்டாவது செயல்திறன்மிக்க சந்தையாக 2010ம் ஆண்டு 96% வளர்ச்சியுடன் தெரிவு செய்யப்பட்டது.

### இலங்கையின் பங்குச் சந்தையின் தோற்றம் / வரலாறு

**History of the Stock Market in Sri Lanka**

1. பிரித்தானிய காலணித்துவ ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்கு தேவையான நிதி மூலதனத்தை திரட்டிக் கொள்ளும் நோக்கத்துடன் பொதுக் கம்பனிகள் பதிவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு பங்குகளை வழங்கி மூலதனம் திரட்ட 1896ம் ஆண்டு பங்குப் பரிவர்த்தனை கூட்டிணைக்கப்பட்டு கொழும்பு தரகர் சங்கமாக (Colombo Broker's Association) முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது.
2. 1904ம் ஆண்டு பங்குத்தரகர் சங்கம் கலைக்கப்பட்டு கொழும்பு தரகர் சங்கம் (Colombo Broker's Association) ஆக உருவாக்கப்பட்டது.
3. 1984ம் ஆண்டு பகிரங்க வியாபாரத்தளம் (Trading Floor) அறிமுகப்படுத்தப்பட்டதன் பயனாக திறந்த கத்தல் முறையில் (Open outerly System) பங்குகள் பரிமாற்றம் செய்ய வசதியளிக்கப்பட்டது.
4. 1986ம் ஆண்டு கொழும்பு பங்குப்பரிவர்த்தனை உத்தரவாதத்தினைப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. (GTE)
5. 1991ம் ஆண்டு மத்திய வைப்புத்திட்ட (தனியாள்) கம்பனி கூட்டிணைக்கப்பட்டது.

6. 1997ம் ஆண்டு யூன் மாதம் 3ம் திகதி திறந்த கத்தல் முறை தன்னியக்க வியாபார முறைமைக்கு (ATS) மாற்றியமைக்கப்பட்டது.

7. 2004ம் ஆண்டு கடன் பிணையங்களுக்கு பிரத்தியேக பிணைங்கள் பரிமாற்று வியாபார முறைமை (Dex) அறிமுகப்படுத்தப்பட்டது.

8. 2008ம் ஆண்டு விசேட அவதானிப்பு (Surplice) முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.


**பங்குச் சந்தையின் வகைகள்**

1. முதலாந்தரப்பங்குச் சந்தை (Primary Market)
   புதிய பங்குகள், தொகுதிக்கடன்களை நிறுவனங்கள் பொதுமக்களுக்கு வழங்கும் சந்தை முதலாந்தர பங்குச் சந்தையாகும்.

2. இரண்டாந்தர பங்குச்சந்தை (Secondary Market)
   முதலாந்தர சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள் தொகுதிக்கடன்கள் கைமாற்றம் செய்யும் பொது ஏற்படும் சந்தை இரண்டாவது பங்குச் சந்தையாகும்.

**இலங்கையில் பங்குச் சந்தைக் கட்டமைப்பு**

**The Structure of the Stock Market in Sri Lanka**




**பங்குச் சந்தையுடன் தொடர்புடைய பிரதான நிறுவனங்கள், தரப்பினர்கள்**

1. இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு
2. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம்
3. பங்குத் தரகர் நிறுவனங்கள்
4. பட்டியல்படுத்தப்பட்டுள்ள கம்பனிகள்
5. மத்தி வைப்புத்திட்ட கம்பனி

### பிணைங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு

**Securities and Exchange commission of Sri Lanka (SEC)**

இலங்கையில் பிணையங்கள் பரிமாற்றங்களை நெறிப்படுத்தி முகாமை செய்வதனை முதன்மை நோக்கமாகக் கொண்டு 1987ம் ஆண்டு 3ம் இலக்க பிணைகள் ஆணைக்குழு சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். இது நியாயமானதும் முறைமை சார்ந்ததுமான பிணையங்கள் சந்தையொன்றை உருவாக்கும்.

### SEC யில் அங்கத்துவம் பெறுவோர் (10 அங்கத்துவர்கள்)

| | |
|---|---|
| 1. மத்தியவங்கியின் பிரதி ஆளுனர் | 01 |
| 2. பதவிவழி நியமனம், சட்டம், நிதி, வர்த்தகம் துறை சார்ந்தஅனுபவம்,பாண்டித்தியம்பெற்றவர்கள | 06 |
| 3. திரைசேரியின் பிரதிச் செயலாளர் | 01 |
| 4. கம்பனிப் பதிவாளர் நாயகம் | 01 |
| 5. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத் தலைவர் | 01 |
| | 10 |

### பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு நோக்கங்கள்

1. ஒழுங்கானதும் நியாயமானதுமான பிணைகள் சந்தையினை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.
2. முதலீட்டாளர்களின் நலன்களை பாதுகாத்தல்
3. நட்ட ஈட்டு நிதியினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பங்குத் தரகர் பங்கு வர்த்தகர் ஆகியவர்களால் ஏற்படக்கூடிய பொறுப்பு மீறல் நட்டத்திலிருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல்
4. பிணைகள் சந்தை ஒழுங்குபடுத்துவதுடன் தொழில்சார் தரத்தினை தொடர்ந்து பேணுதல்

### தொழிற்பாடுகள்

1. பங்கு பரிவர்த்தனை நிலையத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்கலும் அதன் சரியான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தல்
2. பங்கு தரகர் மற்றும் பங்கு வணிகர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கலும் இதன் வரியான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தல்
3. அலகுப் பொறுப்பாட்சி நிறுவனத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்கலும் அதன் சரியான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தல்
4. சந்தை இடையீட்டாளர்களுக்கு பதிவு சான்றிதழை வழங்குவதுடன் சரியான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தல்

### கொழும்பு பரிவர்த்தனை நிலையம்

**Colombo Stock Exchange (CSE)**

இலங்கையின் பங்குச் சந்தை நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக உலக வர்த்தக மையக் கட்டடத்தில் 4ம் மாடியில் தொழிற்படுகின்ற அமைப்பே CSE ஆகும். இது 2007/ 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக இயங்குகின்றது.

தற்போது CSE ஆனது 269 பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியையும், 15 அங்கத்துவ நிறுவனங்களையும், 14 வியாபார அங்கத்துவ நிறுவணங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**CSE யின் தொழிற்பாடுகள்**

1. கம்பனிகள் பட்டியல்படுத்தல்
2. ATS and DEX முறைகள் நடைமுறைப்படுத்தல்
3. பட்டியல் இட்ட கம்பனிகளை மேற்பார்வை செய்தல்
4. விதிகளை மீறும் கம்பனிகளுக்கு நடவடிக்கை எடுத்தல்
5. பங்குச் சந்தை தொடர்பான வழிப்புணர்வை ஏற்படுத்தல்

**CSE முக்கியத்துவம்**

1. தனிநபர்களையும் நிறுவனங்களையும் முதலீடு செய்வதற்கு தூண்டுதல்
2. கம்பனிகள் பாரிய மூலதனத்தினை திரட்டக்கூடியதாக இருத்தல்
3. அரச பிணைப்பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் அரசுக்குத் தேவையான நிதியை திரட்டலாம்.
4. வெளிநாட்டு முதலீட்டுக்கான வாய்ப்பு ஏற்படுத்தல்
5. கம்பனிகளின் நன்மதிப்பும் உயரும்.

**பங்குத்தரகர் நிறுவனங்கள்**

**Stock Brokering Firms**

பங்குச் சந்தைப் பிணையங்கள் (பங்குகள், நம்பிக்கை அலகுகள், தொகுதிக்கடன்கள், திரைசேரி உண்டியல்) மீது தமது நிதியினை முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற SEC யின் அனுமதி பெற்று இயங்கும் நிறுவனமாகும். இலங்கையில் 27 பங்குத் தரகு நிறுவனங்கள் CSE யின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவின் அனுமதி பெற்று செயற்படுகின்றது. இவற்றில் சில வாடிக்கையாளர்களுக்கு இணையத்தள வியாபார (Internet Trading) வசதியினை வழங்குகின்றது.

**பங்குத்தரகர்களால் வழங்கப்படும் சேவைகள்**

**(Service provide by the stockbrokers)**

பங்குச் சந்தையில் பங்குகளை கொள்வனவு மற்றும் விற்பனை செய்வதற்கு பங்குத்தரகர்களின் சேவை இன்றியமையாதது. அதாவது பங்கத் தரகர் இன்றிப் பங்குப் பரிமாற்றம் சாத்தியமற்றது. இவர்களது சேவைகள் வேறுபட்ட நிலைகளில் தேவைக்கு ஏற்ப வேறுபடுகின்றன. அந்த வகையில்,

**நடுவராண்மை சேவைகள் (Intermediation)**

1. பங்குகள் முதலீடுகள் தொடர்பான ஆலோசனைகள் அதாவது பரிமாற்றங்களை முறைப்படுத்தலும் அவற்றை உறுதிப்படுத்தலும்.
2. கம்பனிகளைப் பட்டியல்படுத்துதல், இணைத்தல் மற்றும் கொள்வனவின் போது அவை தொடர்பான ஆலோசனை மற்றும் அனுசரணை வசதி அளித்தல்

3. கொடுக்கல் வாங்கலுக்கான தீர்ப்பனவுகள் - பங்குகளுக்கு T+3 எனும் அடிப்படையில் கூட்டுக்கடன் பத்திரங்கள் மற்றும் அரசாங்க முறிகளுக்கு
4. கொடுப்பனவு எதிர் வழங்கல் (DVP) எனும் அடிப்டையிலும் மேற்கொள்ளப்படுகின்றன.
5. பணம் செலுத்த தவறுவோர்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் முதலீட்டு முகாமைத்துவச் சேவை வழங்குதலும்.

**ஆய்வுச் சேவைகள் (Research)**

பொதுவான பங்குத்தரகர் நிறுவனங்கள் மூலதனச்சந்தை தொடர்பாக மேற்கொள்ள பிரத்தியேக ஆய்வுப் பகுதியினைக் கொண்டுள்ளார்கள். பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளை பிரத்தியேகமான ஆய்வுக்குட்படுத்தி அவற்றின் முடிவுகளின் அடிப்படையில் ஆலோசனைகள் வழங்குவதுடன் அவற்றை காலப்பிரிவு ரீதியாக பின்வரும் வழிகளில் பிரசுரிக்கின்றன.

- நாளாந்த மதிப்பீட்டு அறிக்கைகள்
- வாராந்த அறிக்கைகள்
- கம்பனிகள் பற்றிய விசேட அறிக்கைகள்
- துறை ரீதியான மதிப்பீட்டு அறிக்கைகள்

பங்குத்தரகர்கள் தமது இயலுமைக்கு ஏற்பவே ஆலோசனைகளை வழங்குவார்கள். அவை தவறானவையாக அமையுமிடத்து அதற்கு அவர்கள் பொறுப்பாளிகள் அல்லர்.

**எல்லை வியாபார சேவைகள் (Margin Trading)**

முதலீட்டாளர்கள் பங்கு முதலீட்டுத் தேவையான கடன் வசதிகளை பங்குத்தரகர் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். இச்சேவையினை தனது வாடிக்கையாளருக்கு வழங்க இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

**கூட்டு நிதியியல் சேவைகள் (Corporate Finance Service)**

கம்பனி இணைப்பு மற்றும் கொள்வனவுகளின் போது ஆலோசனை வசதிகள் செய்து கொடுத்தல் கம்பனிகள் பட்டியல்படுத்திக் கொள்வதற்கான குறைந்தபட்ச பங்கு வழங்கல் உத்தரவாத செயலொழுங்குகளைப் பொறுப்பேற்றல் (Under Writer)

**பதிவு செய்தல் மற்றும் ஆவணங்களைக் கோவைப்படுத்தல்**
**(Registration & Documentation)**

பிணையங்கள் கணக்குகளை ஆரம்பித்தல்
பங்குகளை வைப்புச் செய்தல்
பங்குகளை மீளப்பெறல்
பங்குகளை மாற்றுதல்
ஒப்பந்தச் சீட்டுக்களை உருவாக்குதல்

ஆவணப்படுத்தல்களை மேற்கொள்ளல்
கொடுக்கல் வாங்கல்களுக்கான தீர்ப்பனவினை முறைமைப்படுத்தல்

## பங்கத்தரகர் நிறுவனங்களின் தொழிற்பாடுகள் / வணிக சேவைகள் (Function of Stock Broker's)

1. முதலீட்டாளர்களின் கொள்வனவுக் கட்டளைகள், விற்பனைக் கட்டளைகள் என்பவற்றை பெறல்
2. முதலீட்டாளர் சார்பில் மத்திய வைப்பக முறை கணக்கொன்றை திறத்தல்
3. பங்குகளிலும் தொகுதிக்கடன்களிலும் முதலீடு செய்தல் தொடர்பான ஆலோசனைகளை முதலீட்டாளர்களுகளுக்கு பெற்றுக்கொடுத்தல்
4. கம்பனிகளை பட்டியல்படுத்துவதற்கு அனுசரணை வழங்கல்
5. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகளது மூலதனத்தை திரட்டுவதற்கு உதவுதல்

## பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள் (Listed Companies)

கம்பனிகள் தமது பகுதியளவிலான உரிமைத்துவத்தை (பிணைகள்) பொதுமக்களிடையே பகிர்ந்து கொள்வதனூடாக மேலதிக நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றன. இதற்காக கம்பனிகள் தமது பட்டியல் விதிமுறைக்கமைய (Listing rules) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல்படுத்தப்படுகின்றன. இவ்வாறான கம்பனிகள் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள் (Listed companies) எனப்படும். கம்பனிகள் பட்டியல் விதிக்கமைய மூன்று முறைகளில் தமது உரிமை முதலினைப் (Equity) பட்டியல்படுத்திக் கொள்ள முடியும்.

## பங்குச் சந்தையில் பட்டியல் இடும் முறைமைகள் (Methods of Listing)

| | |
|---|---|
| அறிமுகப்படுத்தல் | - Introduction |
| விற்பனைக்கான அழைப்பு | - Offer for sale |
| பங்களிப்புக்கான அழைப்பு | - Offer for subscription |

**அறிமுகப்படுத்தல்:** கம்பனிகள் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியல்படுத்துவதற்கான வழிமுறைகளில் அறிமுகப்படுத்தலும் ஒன்று. இந்த வகையில் கம்பனிகள் குறுங்காலத்தில் புதிய பங்குகளை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கமின்றி தம்மை நிதி உலகிற்கு அறிமுகப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருக்கும். இவை கம்பனிச் சட்டத்திற்கு மேலாக பரிவர்த்தனையில் பட்டியல் விதியினையும் பின்பற்ற சட்டரீதியாக கடமைப்பட்டுள்ளன.

**விற்பனைக்கான அழைப்பு:** கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல்படுத்துவதற்கான முறைகளில் விற்பனைக்கான அழைப்பும் ஒன்று. இங்கு கம்பனிகள் மேலதிகமாக புதிய பங்குகளை பொதுமக்களுக்கு வழங்காது, ஏற்கவே வழங்கியிருந்த பங்குகள் கொண்டுள்ள கம்பனியுடன் தொடர்புடையவர்கள் அவற்றை பங்குப்பரிவர்த்தனையில்

பட்டியல்படுத்துவதனூடாக விற்பனை செய்வதனை நோக்கமாகக் கொண்டிருக்கும். இவை கம்பனிச் சட்டத்திற்கு மேலாக பரிவர்த்தனையின் பட்டியல் விதியினையும் பின்பற்ற சட்டரீதியாக கடமைப்பட்டுள்ளன.

**பங்களிப்புக்கான அழைப்பு:** கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல்படுத்துவதற்கான முறைகளில் பங்களிப்புக்கான அழைப்பும் ஒன்று. கம்பனிகள் முன்விபரணத்தினை வெளியிட்டு அதன் ஊடாக விண்ணப்பப்படிவங்களை வழங்க நிர்ணயிக்கப்பட்ட விலையில் புதிய பங்குகளை புதிய உரிமையாளருக்கு ஒதுக்கி வழங்குகின்றது.

**முன் விபரணம்** (Prospectus)

பொதுமக்களுக்குப் பங்குகளை வழங்கத் தீர்மானித்த கம்பனிகள் அப்பங்குகளை கொள்வனவு செய்யுமாறு விடுக்கப்படும் பகிரங்க அழைப்பு முன்விபரணம் எனப்படும். கம்பனிகள் பங்கு வழங்கல் மூலம் திரட்டப்பட்ட நிதியினை கம்பனியின் குறிக்கோளினை அடைந்து கொள்ளும் வகையில் முறைமைப்படுத்தப்படுகின்றது. எனவே கம்பனிகள் முன்விபரணத்தின் ஊடாக கம்பனியின் குறுங்கால நீண்டகால நோக்கு எல்லைகள் உட்பட கடந்தகால மற்றும் நிகழ்கால நிதிசாராத அனைத்துத் தகவல்களையும் வெளிப்படுத்தும்.

ஒவ்வொருவரும் பங்குகளை கொள்வனவு செய்ய முன்னர் முன்விபரணத்தில் உள்ள விடயங்களை அறிந்திருத்தல் முக்கியமானதாகும். தேவைப்படின் துறைசார் வல்லுநர்களின் ஆலோசனை பெற்று பங்குகளுக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பபத்திரத்தினை முழுமையாக நிரப்பி உங்கள் பங்குச் சந்தைக்கணக்கு இலக்கத்தினையும் (CDS A/C) சரியாக உரிய கூட்டில் இட்டு காசோலையினையும் இணைத்து பதிவுத்தபாலில் அல்லது பங்குத்தரகர்களிடம் கையளிப்பதன் மூலம் பங்குகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இவ் முன் விபரணத்தினை கம்பனியிடமிருந்து அல்லது பங்குச் சந்தையின் கிளை நிறுவனங்களில் அல்லது வங்கிகளில் அல்லது இணையத்தளங்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். கம்பனிகள் முன்விபரணத்தில் குறிப்பிட்டது போன்று பங்குகளை ஒதுக்கீடு செய்யும். பங்குகளுக்கு மிகைக்கேள்வி (Over subscription) ஏற்படுமிடத்து குறித்த விகிதாசார அடிப்படையில் பங்குகள் ஒதுக்கப்படும். நாம் விண்ணப்பித்ததனைக்காட்டிலும் குறைவாக பங்குகள் ஒதுக்கப்பட்டால் மிகுதிப்பணம் உரியமுறையில் காசோலை மூலமாக உமக்கு 10 வியாபார நாட்களுக்குள் மீள வழங்கப்படும்.

இங்கு பங்குகளுக்கான அறிமுக விலையானது பொதுவாக நிலையான ஒரு விலையாகவே அமைந்திருக்கும். இப்பங்குகளை பங்குவழங்கல் நிறைவு பெற்ற நாள் முதல் 18 வியாபார நாட்களுக்குள் பங்குச் சந்தையில் பரிமாற்றிக் கொள்ள அல்லது மீள் கழிவு செய்து கொள்ள முடியும்.

**மத்திய வைப்புத் திட்டக் கம்பனி – Central Depository System co LTD.**

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தீர்ப்பனவு மற்றும் பதிவு செய்தல் தொழிற்பாடுகளை பொறுப்பேற்று நிறைவேற்றுவதற்காக CSE யின் துணைக்கம்பனியாக ஓர் தனியார் வரையறுத்த கம்பனியாக தொழிற்படுகின்றது.

**மத்திய வைப்புத் திட்டக் கணக்கு – Central Depository System Account**

பங்குத் தரகர்/நம்பிக்கைப் பொறுப்பு வங்கியாளர்களைக் கொண்டு செயற்படும் 15 வணிக வங்கிகளினூடாக (Custodians Banks) CDS கணக்கு விண்ணப்பத்தைப் பெற்று CDS கணக்கினை ஆரம்பிக்க முடியும். இதனை ஆரம்பிக்க எவ்வித கட்டணமும் இல்லை. ஒருவரது NIC Number கணக்கு இலக்கமாகப் பேணப்படும்.

**மத்திய வைப்புத் திட்டக் கணக்கு வகைகள்**

**1. மூடிய நிலுவைக் கணக்கு Locked A/C**

குறுங்கால விற்பனை அல்லது மீள்முதலீட்டு நோக்கம் இன்றி நீண்ட காலத்திற்கு கம்பனியின் உரிமத்தினை பேண விரும்பும் கணக்கு வகையாகும்.

**2. வியாபார நிலுவைக் கணக்கு (Trading A/C)**

பங்குகளை உடனடியாக விற்பனை செய்யும் நோக்கில் அதாவது மீள் முதலீடு செய்யும் நோக்கில் பேணப்படும் பங்குநிலுவைகள் கொண்ட பரிமாற்றல் கணக்கு வகையாகும்.

**மத்திய வைப்புத் திட்டக் கம்பனியின் தொழிற்பாடுகள்**

1. வாடிக்கையாளரைப் பதிவு செய்தல்
2. பங்குகளை வைப்பிடல்
3. பங்குப்பரிமாற்றல்
4. தீர்த்து வைத்தல்
5. கணக்குகளை பேணல், கணக்கறிக்கைகளை அனுப்பி வைத்தல்

**பங்குப்பரிமாற்றல் நேரகாலங்கள் (Trading Time Periods)**

கிழமை நாட்களில் அதாவது திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30 தொடக்கம் மாலை 2.30 வரையான காலப்பகுதியில் பங்குகளைத் தொடர்ச்சியாக தன்னியக்க வியாபார முறைமையில் (ATS) பரிமாற்றம் செய்ய வசதியளிக்கப்பட்டுள்ளது.

அதே போல கடன் பிணைப் பொறுப்புக்களை DEX என அழைக்கப்படுகின்ற கடன் பிணைங்களின் பரிமாற்று முறைமையூடாக காலை 9.30 முதல் மதியம் 12.30 வரையான காலத்தில் பரிமாற்றிக் கொள்ள வசதியளிக்கப்பட்டுள்ளது.

**ஏலத்திற்கு முன்னர் (Pre Open)**

இக்காலப்பகுதியில் (மு.ப 9.00 தொடக்கம் 9.30 வரை) கொள்வனவு மற்றும்

விற்பனைக் கட்டளைகளை பிறப்பிக்க அல்லது அதில் மாற்றங்களை ஏற்படுத்த அல்லது அதிலிருந்து முழுமையாக மீண்டு கொள்ளும் வகையில் வசதியளிக்கப்பட்டுள்ளது. இந்த 30 நிமிடங்களும் கட்டளைகள் ATS முறைமைக்குள் உட்படுத்தப்படுகின்றதே ஒழிய பரிமாற்ற செயல்முறைக்கான கட்டளைகளாக உள்வாங்கப்படுவதில்லை. பகிரங்க ஏலக்காலத்திலேயே கட்டளைகள் முதல்முதலாக நிறைவேற்று பொறிமுறையுடன் தொடர்புடைய இயந்திரத்திற்கு மாற்றப்படுகின்றன.

**பகிரங்க ஏலம் (Open Auction)**

இக்காலப்பகுதியில் ((மு.ப 9.30 தொடக்கம் பி.ப 2.30 வரை) கட்டளைகள் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்படுவதுடன், கட்டளைப் புத்தகத்தில் உள்ளகட்டளைகள் மட்டும் பரிமாற்றல் பங்குகளுக்கான ஆரம்ப விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன. இங்கு ATS விதி 4க்கு அமைவாக ஆரம்ப விலைகள், கட்டளைகள் என முறைமைப்படுத்தப்படும்.

**வழக்கமான வியாபாரம் (Regular Trading)**

இக்காலப்பகுதியில் ((மு.ப 9.30 தொடக்கம் பி.ப 2.30 வரை) கட்டளைப் புத்தகத்ததுடன் உள்ள கட்டளைகளுடன் தொடர்ச்சியாக புதிய கட்டளைகள் ஒப்பிட்டு (Matching the Orders) பரிமாற்றம் நிறைவேற்றப்படுகின்றது. மாறாக கட்டளைகள் நிறைவேறத்தவறும் (Un executed Orders) பட்சத்தில் அவை கட்டளைகளின் தன்மைக்கு ஏற்ப புத்தகத்தில் பதிவு செய்யப்படுகின்றன. இங்கு கட்டளைகள் விலை நேரம் முன்னுரிமை அடிப்படையில் விலைப் பொறிமுறைக்கு உட்படுத்தப்படுகின்றது.

**சந்தை நிறைவு (Market Close)**

பங்குகளுக்கான சந்தை பி.ப 2.30 மணியுடன் நிறைவுக்குக் கொண்டுவரப்படுகின்றது. அதேபோல கடன் பிணையங்களுக்கான சந்தை மதியம் 12.30 மணியுடன் நிறைவுக்குக் கொண்டு வரப்படுகின்றது. நிறைவின் போது அனைத்துப் பிணையங்களுக்கும் குறித்த நாளுக்கான நிறைவு விலை தீர்மானிக்கப்படும். இவ்விலையானது பெறுமதி நிறையிடப்பட்ட சராசரி விலையாக (VWAP) அமைந்திருக்கும்.

**பங்குப்பரிமாற்றம் தொடர்பான கட்டளைகள் – Types of Orders**

**1. சந்தைக் கட்டளைகள் – Market Orders**

குறித்த பங்கினை சந்தையில் நிலவுகின்ற விலையில் கட்டளையிட்டுப் பெற்றுக் கொள்ளல் / விற்பனை செய்தல் சந்தைக் கட்டளை எனப்படும்.

**2. வரையறுத்த கட்டளைகள் – Limited Orders**

முதலீட்டாளர்கள் தாம் விரும்பிய விலைகளில் கட்டளையிட்டுப் பெற்றுக் கொள்ள வசதியளிக்கப்படுகின்றது. இங்கு முதலீட்டாளர்கள் சந்தையின் நிலைமைக்கு ஏற்ப வரையறுத்த கொள்வனவுக் கட்டளைகள் (Limited by Order) மற்றும் வரையறுத்த விற்பனைக் கட்டளைகளை (Unit sell Orders) நிலையிருந்து கட்டளையிட முடியும்.

**3. கட்டளை நிபந்தனைகள்** Order Qualifiers

முதலீட்டாளர்கள் வரையறுத்த பின்வரும் இரண்டு பிரதான நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு வரையறுத்துக் கொள்ள முடியும். அவையாவன கட்டளைக்காலம் மற்றும் பருமன் என்பனவாகும்.

கட்டளைக்கால நிபந்தனை அடிப்படையில் நோக்குமிடத்து அதனை மூன்றாக வேறுபடுததிக் கொள்ள முடியும்.

**1. குறித்த நாள் கட்டளை Day Order:** கட்டளைக்காலம் ஓர் வியாபார நாட்களுக்கு உட்பட்டதாக (9.30-2.30) அமையும் கட்டளை குறித்த நாள் கட்டளை எனப்படும். குறித்த நாளுக்குள் கட்டளை நிறைவேறத் தவறுமிடத்து (Non Executed) சந்தை நிறைவில் தன்னிச்சையாக நீங்கிவிடும்.

**2. குறித்த நாள் வரையான கட்டளை (Good till day Order (GTD):-** கட்டளைக்காலம் குறித்த வியாபார நாட்களாக அமையும். கட்டளைகள், குறித்த நாள் வரையான கட்டளை எனப்படும். ஆகக் கூடுதலாக 5 வியாபார நாட்கள் வரை கட்டளையிட முடியும். குறித்த கட்டளை 5 வியாபார நாட்களுக்குள் நிறைவேறத் தவறுமிடத்து 5ஆம் நாள் சந்தை நிறைவில் தன்னிச்சையாக நீங்கிவிடும்.

**3. நீக்கப்படும் வரை செல்லுபடியாகும் கட்டளை Good till Cancelled order (GTC):-** கட்டளையானது முதலீட்டாளரினால் நீக்கப்படும் வரை தொடர்ந்திருக்கும் கட்டளை நீக்கப்டும் வரை செல்லுபடியாகும் கட்டளை எனப்படும். ஆகக் கூடிய கட்டளைக் காலமாக 5 வியாபார நாட்கள் அமைகின்றன.

கட்டளை பருமன் நிபந்தனை அடிப்படையில் நோக்குமிடத்து அதனை நாம் மூன்றாக வேறுபடுத்திக் கொள்ள முடியும்.

**1. நிபந்தனையற்ற கட்டளைகள் No qualifiers:-** இது திறந்த கட்டளை வகையினைச் சார்ந்தது. அதாவது திறந்த சந்தையில் கிடைக்கக்கூடிய பிணைங்களின் அளவுகட்கு ஏற்ப பிறப்பிக்கப்படும் கட்டளைத் தெகையானது வரையறுக்கப்படாது பிறப்பிக்கப்படுகின்றது. இங்கு கட்டளைத் தொகை முழுமையாக பகுதியளவாக நிறைவேற்றப்படலாம்.

**2. பூர்த்தி செய்ய முடியாவிடின் நீங்கும் கட்டளைகள் Fil or Kill Orders (FOK):-** குறித்த நேரத்தில் உடனடியாக கொள்வனவு அல்லது விற்பனை தொடர்பில் முதலீட்டாளர் பருமன் (Quality) குறித்து பிறப்பிக்கப்படும் கட்டளை வகையினைச் சார்ந்தது. முழுமையாக பருமன் ஒரே தடவையில் நிறைவேற்றத் தவறுமிடத்து தன்னிச்சையாகவே கட்டளைகள் நீங்கிவிடும். மாறாக பகுதியளவில் வியாபார நிறைவேற்றங்களுக்கு சந்தர்ப்பம் இல்லை.

**3. உடனடி அல்லது செல்லுபடியற்றதாகும் Immediate or Cancel (IOC)**

குறித்த நேரத்தில் கொள்வனவு அல்லது விற்பனை தொடர்பில்

முதலீட்டாளர் கட்டளைப் பருமன் (Order Quantities) குறித்து பிறப்பிக்கப்படும் கட்டளை வகையிகைச் சார்ந்தது. முழுமையாக அல்லது பகுதியளவில் உடனடியாக நிறைவேற்றப்படக்கூடியது. தவறுமிடத்து முழுமையாக அல்லது நிறைவேற்றப்படாத பகுதிக்கான கட்டளைகளை நீங்கிவிடும்.

தன்னியக்க வியாபார முறைமையில் (ATS) பின்வரும் 2 முறைகளில் கொள்வனவு மற்றும் விற்பனைக் கட்டளைகளை பிறப்பிக்க முடியும். பொதுவாக பரிமாற்றம் முதலீட்டாளர்கள் சார்பாக அவர்களின் கட்டளைத் தொகை 100 இன் மடங்குகளாக அமையுமிடத்து Normal lot எனவும், 100 மடங்காக காணப்படாவிடின் Odd lot எனவும் வகைப்படுத்தப்படுகின்றன.

மேலும் Crossings, All or None Block உள்ளிட்ட பரிமாற்றங்கள் Block Transaction இல் உள்ளடங்கும்.

**பங்குச் சந்தைக்சுட்டிகள் Stock Market Indices**

பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை எண்கணித ரீதியில் குறித்துக் காட்டுதல் பங்கு விலைச்சுட்டி எனப்படும். கொழும்பு பங்குச் சந்தையின் விலைப் போக்கினை மதிப்பிட பின்வரும் சுட்டிகள் பயன்படுத்தப்படுகின்றது.

**அனைத்துப் பங்குகள் விலைச்சுட்டி** (All share Price Index ASPI)

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல்படுத்தப்பட்ட அனைத்துக் கம்பனிகளினதும் சாதாரண பங்குகளின் சந்தை விலை மட்டத்தில் ஏற்படுகின்ற அசைவினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்டுகின்ற விலைச்சுட்டி ASPI எனப்படும். இச்சுட்டி குறித்த தினத்தில் அல்லது நேரத்தில் பங்குச் சந்தையின் சந்தை முதலாக்கல் பெறுமதியினை அதன் அடிப்பருவச் சந்தை முதலாக்கல் பெறுமதியின் நூற்று வீதமாக கணிப்பிடப்படுகின்றது. இச்சுட்டி 1985ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அடியாண்டாக 1985 ஆண்டும் பெறுமதி 100 ஆகவும் அமைகின்றது.

**மிலங்கா விலைச்சுட்டி (Milanka Price Index MPI)**

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளில் காலப்பிரிவு ரீதியாக பிரத்தியேகமாக தெரிவு செய்யப்படும் 25 கம்பனிகளின் சந்தை விலைகளின் அசைவுகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்ற விலைச்சுட்டி MPI எனப்படும் குறித்த தினத்தில் அல்லது நேரத்தில் பங்குச் சந்தையில் தெரிவு செய்யப்படும் 25 கம்பனிகள் சந்தை முதலாக்கல் பெறுமதியானது அதன் அடிப்பருவச் சந்தை முதலாக்கல் பெறுமதியின் விகிதமாக கணிப்பிடப்படும்.

இவ்வாறு கணிப்பீட்டிற்கு காலப்பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்படுகின்ற கம்பனிகள் குறித்த கால வீச்சில் பிரத்தியோகமாக மிலங்கா கம்பனிகள் எனப்படும். இத்தெரிவுக்கான அடிப்படையாக கம்பனியின் பருமன் (Market Capitalization) பங்குகளின் திரவத்தன்மை (Liquidity) ஆகியன அமைகின்றன.

மிலங்கா விலைச்சுட்டி வருடத்தில் இரண்டு தடவைள் CSE யினால் மறுசீரமைக்கப்படுகின்றது. மிலங்கா கம்பனிகள், Blue chip கம்பனி என்பதிலிருந்து வேறுபட்டது. தற்போது நாம் எந்தக் கம்பனிகளையும் புளூசிப் கம்பனிகள் என்று குறிப்பிடுவதில்லை. மிலங்கா விலைச்சட்டி உயர்ந்த திரவத்தன்மை கொண்ட கம்பனிகளை வேறுபடுத்திக் காட்டுகின்றது.

1999ம் ஆண்டு ஜனவரி மாதம் 4ம் திகதி முதல் செயற்பட்டுவருகின்ற மிலங்கா விலைச்சுட்டி உணர்திறன் விலைச்சுட்டிக்குப் (Sensitive Price Index) பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டது.1999ம் ஆண்டு 1ம் திகதி தொடக்கம் MPI அறிமுகப்படுத்தும் வரை உணர்திறன் விலைச்சுட்டி செயற்படுத்தப்பட்டு வந்தமை குறிபிடத்தக்கது. அடியாண்டாக 1998 ஆண்டும் பெறுமதி 1,000 ஆகவும் அமைகின்றது.

**மொத்த வருவாய் விலைச்சுட்டி** (Total Return Index-TRI)
கொழும்பு பங்குப் பரிவர்த்தனையால் 2004ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட இச்சுட்டி, குறித்த கால வரையறைக்குரித்தான பங்கிலாபம், வட்டி, மூலதனலாபம் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. அதாவது பங்கு விலைச்சுட்டியின் பங்கிலாபமாறல்களையும் உள்ளடக்கிய சுட்டி மதிப்பீடு TRI எனப்படும். இது முதலீடுகள் மீதான வருமானத்தினை அளவிட உதவுகின்றது.

திரு.க.சத்தியதாசன்
வருகைதரு விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

# பெறுமதி கூட்டிய வரி
# (Value Added Tax)

- பொருட்கள் சேவைகளின் கூட்டப்பட்ட பெறுமதி மீது விதிக்கப்படும் வரி VAT எனப்படும். இங்கு
  நுகர்வோர் தாம் வரி செலுத்துகின்றோம் என்ற உணர்வின்றி செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

- தபால்சேவை மற்றும் சில வியாபாரங்கள் வரி விலக்குப்பெற்றுள்ளன. (விற்பனை புரள்வு குறைந்த வியாபாரநிறுவனங்கள்) VATஆனது இலங்கையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது.

- இது முதன்முதலில் அறிமுகமானது பிரான்ஸ் நாட்டிலாகும்.VAT முறையானது இலங்கையில் 2002 August 01 அன்றே அறிமுகமானது.

**வரி விபரத்திரட்டு (Tax Return)**

வரி விதிப்பிற்குரிய காலப்பகுதி முடிவடைந்து அடுத்து வரும் மாதத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பெறுமதி கூட்டப்பட்ட வரி தொடர்பான விபரங்களை அறிவிக்கும் அறிக்கை வரி விபரத்திரட்டு எனப்படும்.

**VAT இற்கான பதிவு**

01. பொருட்கள் சேவைகள் கொள்வனவிற்கு

| | |
|---|---|
| கொள்வனவுக்கணக்கு | - வரவு |
| Vat கணக்கு | - வரவு |
| கடன் கொடுத்தோர் /காசு கணக்கு | -செலவு |

02. பொருட்கள் சேவைகளின் விற்பனை

| | |
|---|---|
| காசு /கடன்பட்டோர் கணக்கு | -வரவு |
| விற்பனைக் கணக்கு | -செலவு |
| VAT கணக்கு | -செலவு |

M.திவ்வியநாதன்
139/11/com/13

# முகாமைத்துவம்
# (Management)

**முகாமை**

நிறுவனத்தின் நோக்கத்தை வினைத்திறனாக அடைந்து கொள்வதற்கு மனித, பௌதீக, தகவல் வளங்களை திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாட்டுக் கருமங்கள் முகாமைத்துவம் எனப்படும்.

**திட்டமிடல் (Planning)**

நிறுவனத்தின் நோக்கத்தினை நிச்சயித்துக்கொள்வதும் அவற்றை அடைந்து கொள்வதற்கு தேவையான வழிமுறைகளைத் தீர்மானித்தல் திட்டமிடல் எனப்படும்.

திட்டமிடல் முறையாகக் காணப்படாதவிடத்து சகல நடவடிக்கைகளும் தோல்வியடையும். திட்டமிடல் மூலம் எதனை? எவ்வாறு? எப்பொழுது மேற்கொள்ளலாம் என்பதை வெளிப்படுத்தலாம்.

**ஒழுங்கமைத்தல் (Organization)**

ஒரு நிறுவனம் தமது குறிக்கோள்களை அடைய ஒழுங்கமைத்தற் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியது அவசியமாகும். எத்தகைய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை முதலில் கண்டறிதல் வேண்டும். அதற்கிணங்க வேலைகள் பகிர்தளிக்கப்பட வேண்டும். இது ஓர் ஒழுங்குமுறையில் மேற்கொள்ளப்படுவதுடன் சரியான நபர்களிடம் அவை கையளிக்கப்பட வேண்டும். உற்பத்தியில் வளங்களை எந்த எந்த துறைக்கு ஒதுக்க வேண்டும் என்பதும் தீர்மானிக்கப்பட வேண்டும். இவையனைத்தும் இயைபாக்கம் செய்தல் மூலமேஒழுங்கமைத்தற் செயற்பாடு பூர்த்தி பெறும்.

**நெறிப்படுத்தல் (Co ordination)**

வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான தலைமைத்துவம், பொதுத் தொடர்பு, ஊழியர் ஊக்குவிப்பு போன்ற நடவடிக்கைளில் ஈடுபடல்

**கட்டுப்படுத்தல் (Controlling)**

திட்டமிட்ட நியமத்திற்கு ஏற்ப பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து வேறுபாடு காணுமிடத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல். இது பின்வரும் படிமுறைகளைக் கொண்டுள்ளது.


01. நியமங்களைத் தீர்மானித்தல்

02. பெறுபேறுகளை நியமத்துடன் ஒப்பிடல்

03. பெறுபேறுகளை மதிப்படல்

04) வேறுபாடு காணப்படின் அதனை சீராக்க நடவடிக்கை எடுத்தல்

முகாமை தொழிற்பாட்டுத் தொடர்பு




திட்டமிடலுக்கு அமைய வளங்களை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தி கட்டுப்பாடுகளை மேற்கொண்டு வேறுபாடு காணப்படுமிடத்து அவற்றினை திருத்தி மீண்டும் திட்டமிடல் மேற்கொள்வதாகும். இவ்வடிப்படையில் இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது.

A.லக்ஷ்மிநாதன்
140/11/com/14

# இலங்கை கணக்கீட்டு நியமம் 05, எனது பார்வையில்.....

**கணக்கீட்டு நியமம் 05 (SLAS-05)**

மிகப்பரந்தளவில் நிறுவனங்களால் இருப்பு மதிப்பீட்டில் பயன்படுத்துகின்ற முறையாகிய வரலாற்றுக்கிரய முறையில் இருப்பு மதிப்பீட்டினை மேற்கொள்வதனையும் அதனை நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டுவதனையும் கணக்கீட்டு நியமம் 5 குறிப்பிடுகின்றது.

இந்நியமத்திற்கு அமைவாக இருப்பு, இருப்பின் வரலாற்றுக்கிரய பெறுமதி, இருப்பு மதிப்பீட்டு முறைகள், இருப்பு தொடர்பான வெளிப்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக இக்கட்டுரையில் சுருக்கமான விளக்கத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

**இருப்பு**

வழமையாக வியாபாரத்தின் மீள்விற்பனைக்காக வைத்திருக்கப்படுகின்ற பொருட்களும் (முடிவுப்பொருள்) அவ்வாறான விற்பனைக்காக உற்பத்திச் செய்முறையில் உள்ளனவும் (நடைமுறைவேலை) உற்பத்தி செய்வதற்கு உள்ளீடாக பயன்படுத்துவதற்கென கொள்வனவு செய்யப்படுகின்றவையும் (மூலப்பொருள்) நிறுவனத்தின் உடமைகள் அல்லது சொத்துக்கள் இருப்பு ஆகும்.

இங்கு கொள்வனவும் கிரயம் என்பது இருப்பினைக் கொள்வனவு செய்கின்ற போது ஏற்படும் காசு செலவினத்தையும் அவ்விருப்புக்கொள்வனவுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட உட்சுமைக்கூலி, சுங்கத்தீர்வை போன்றவற்றினை உள்ளடக்கியதாகும். கொள்வனவு செய்யப்பட்ட இருப்பினை விற்பனை விலையில் மாற்றுவதற்கான பொதியிடல், காட்சிப்படுத்தல் போன்ற செலவினங்கள் மாற்றல்கிரயம் எனப்படுகின்றது. இருப்புடன் தொடர்புபட்ட கிரயம் ஒன்றானது இருப்பின் கொள்வனவுக்கிரயம், மாற்றல்கிரயம் ஆகியவற்றினுள் உள்ளடக்கப்படாத போது அது இருப்பின் ஏனைய கிரயம் எனக் குறிப்படப்படுகின்றது. எனவே இருப்பின் வரலாற்றுக்கிரயம், இருப்பின் கொள்வனவுக்கிரயம். மாற்றல்கிரயம், ஏனைய கிரயம் ஆகிய மூன்றையும் இணைக்க வருவதாகும்.

**இருப்பு மதிப்பீட்டு முறைகள்**

இருப்பு மதிப்பீட்டு முறைகள் இருவகையாக நடைமுறையில் உள்ளது.

01. தனித்தனியாக இருப்பு மதிப்பீட்டு முறை
02. மொத்த அடிப்படையிலான இருப்பு மதிப்பீட்டு முறை

இங்கு தனித்தனியாக மதிப்பீட்டு முறை என்பது இருப்பினுள் உள்ளடங்கும். ஒவ்வொரு வகையான இருப்புக்களையும் தனித்தனியாக கருதி அவற்றின் கிரயவிலை, தேறிய நிகரப்பெறுமதி ஆகியவற்றுடன் ஒப்பீடு

செய்யப்பட்டு இருப்பு மதிப்பிடப்படும் போது அது தனித்தனியான மதிப்பீட்டு முறை ஆகும்.

மொத்த அடிப்படையிலான இருப்பு மதிப்பீட்டு முறையின் கீழ் இருப்பு என்பதினுள் ஒன்றுக்கு மேற்பட்ட வகையான இருப்புக்கள் காணப்படினும் அவை அனைத்தினதும் மொத்த கிரயப்பெறுமதி, மொத்த அடிப்படையிலான தேறியநிகரப் பெறுமதி ஆகியன ஒப்பீடு செய்யப்பட்டு இருப்பு மதிப்பிடப்படும் முறை இதுவாகும்.

கணக்கீட்டு நியமம் 5 ற்கு அமைய நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

01. ஐந்தொகை அன்றி குறிப்புக்களிலோ ஒவ்வொரு வகையான இருப்பு தனித்தனியாக பிரித்துக்காட்டப்படல் வேண்டும். அதாவது மூலப்பொருள் இருப்பு, முடிந்த பொருள் இருப்பு குறைவேலை இருப்பு என காட்டப்படுதல் வேண்டும்.

02. இருப்பு மதிபீட்டுக் கொள்கை, இருப்பு மதிப்பீட்டுச் சூத்திரம் என்பன கணக்கறிக்கைகளில் வெளிக்காட்டப்படல் வேண்டும். இருப்பு மதிப்பீட்டுக்கொள்கை மாற்றப்பட்டு இருப்பின் அவ்விடயமும் அதற்கான காரணமும் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

R.கபிலதாஸ்
130/11/com/04

# இலத்திரனியல் வர்த்தகம்
# (E- commerce)

வளர்ந்து வருகின்ற நவீன உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியின் செல்வாக்கு பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து செல்கின்றது. இந்த வகையில் வியாபார துறையிலும் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. இவ்வகையான செல்வாக்கின் அதிகரிப்பு இன்றியமையாததும் மறுமுனையில் வரவேற்கத்தக்கதும். இந்நிலையில் இலத்திரனியல் வர்த்தகமும் (E- commerce) தொழில்நுட்பத்தின் பெயர் கிடைத்த ஒரு வளர்ச்சிப்படியாகும்.

இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரயோகமானது 1970 களின் ஆரம்பத்தில் நிதி மாற்றம் போன்ற புத்தகங்களுடன் ஆரம்பமானது எனலாம். எவ்வாறாயினும் இந்தப் பிரயோகமானது பாரிய கூட்டுத்தாபனங்களுக்கும் ஒரு சில சிறிய தொழில் நிறுவனங்களுக்கும் மட்டுமே வரையறுக்கப்பட்டதாக ஆரம்பத்தில் காணப்பட்டது. இலத்திரனியல் தரவு பரிமாற்றம் வந்த பின்னர் இலத்திரனியல் வர்த்தகமானது நிதி மாற்றங்களிலிருந்து ஏனைய வழியாக்கத்திற்கு விரிவுபடுத்தப்பட்டது.

இலத்திரனியல் வர்த்தகம் அல்லது மின்னறு வர்த்தகம் என்பது இணையத்தினை உள்ளடக்கி கணினி அலையமைப்புக்கள் மூலமாக பொருட்கள், சேவைகள், தகவல் என்பவற்றினை வாங்குவதனையும், விற்பனை செய்வதனையும் விபரிக்கிறது.

இலத்திரனியல் வர்த்தகத்தினை மேற்கொள்ள பின்வருவன தேவைப்படுகின்றன.

01. இணைய வசதிகளுடன் கூடிய கணினிகள்
02. Web Server இலிருந்து தேவையான Web Sites ஐ பதிவு செய்து
    பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
03. அந்த Web Site இற்குரிய பெயரை பதிவு செய்தல்
04. பெறப்பட்ட Web Site ஐ வடிவமைக்க வேண்டும்.

வளர்ந்து வருகின்ற இந்த நவீன உலகில் இலத்திரனியல் வர்த்தகத்தின் வளர்ச்சியும் அதன் தேவைப்பாடும் அதிகரித்துச் செல்கின்றது. அத்துடன் அது தவிர்க்க முடியாததும் கூட..............

S.சிவறமணன்
141/11/com/15

# கணக்கீட்டு எண்ணக்கருவின் தோற்றப்பாடு

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படைக் கணக்கு பதிவுகள், முறைகள் மரபுகள் என்பவற்றினையே கணக்கீட்டு எண்ணக்கருக்கள் என்கின்றோம்.

ஒரு நிறுவனத்தில் அக்கறை உள்ளவர்களுக்கு தகவல்களை வழங்கவும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் அவை நம்பகத்தன்மை உடையதாய் அமைவதற்கும் இந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் ஒரே முறையைப் பின்பற்றித் தயாரிக்க வேண்டியது அவசியமாகின்றது. இதற்கு கணக்கீட்டு எண்ணக்கரு இன்றியமையாததொன்றாகும்.

**முக்கியமான கணக்கீட்டு எண்ணக்கரு**

01.அலகுசார் எண்ணக்கரு
02. பண அளவீட்டு எண்ணக்கரு
03. வரலாற்று கிரய எண்ணக்கரு
04. அட்டுறு எண்ணக்கரு
05. தேறல் எண்ணக்கரு
06. தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு
07. கால அளவு எண்ணக்கரு
08. இரட்டை விளைவு எண்ணக்கரு
09. இணைத்தல் எண்ணக்கரு
10. முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
11. பொருண்மை /முக்கியத்துவ எண்ணக்கரு
12. கொள்கை மாறாமை எண்ணக்கரு
13. நோக்கமான எண்ணக்கரு
14. வெளிப்படுத்தல் எண்ணக்கரு

B.மெலிசன் றாகல்
151/11/com/125

# இலக்குகளை அடைவதில் திட்டமிடலின் அவசியம்

முகாமைத்துவ செயற்பாடுகளில் பிரதானமானது திட்டமிடல் ஆகும். திட்டமிடல் என்பது நிறுவனம் தான் அடைய வேண்டிய நோக்கத்தினை நிர்ணயித்து அதனை எவ்வாறு அடைந்து கொள்ள முடியும் என்பதனை நிர்ணயிப்பதனை கருதும்.

திட்டமிடல் செயற்பாட்டின் தொடர் ஒழுங்காக,

01. நோக்கத்தினை நிர்ணயித்தல்
02. நோக்கத்தை அடைவதற்கான சாதக பாதக காரணிகளை தீர்மானித்தல்
03. திட்டத்தை அடைய தேவையான மனித, பௌதீக வளங்களை தீர்மானித்தல்
04. திட்டம் அமுலாக்கல் என்பனவாகும்.

இத்திட்டமிலின் நன்மைகளாக,

01. நிறுவன செயற்பாடுகளை குறைத்தல்
02. வள விரயங்களை குறைத்தல்.
03. அடையப்படும் இலக்குகள் முன்னரே தீர்மானிக்கப்படல்.
04. செயற்பாடுகளை இலகுவாக்குதல்
05. எதிர்கால நிலைமைகளை முன்னுணர்ந்து செயற்பட முடிதல்
06. வினைத்திறனான செயற்பாடுகள் ஊடாக உரிய இலக்கினை அடைய வழிகாட்டுதல்

போன்றன ஆகும். திட்டமிடலில் 4 வகைகள் உண்டு. அவையாவன,

01. தந்திரோபாய திட்டம் (Strategic plan)
02. செயற்பாட்டுத்திட்டம் (Co-operational plan)
03. குறுங்காலத்திட்டம் (Short Term plan)
04. நீண்டகாலத்திட்டம் (Long Term plan)

திட்டமிடலின்படி நோக்கங்கள் உரிய முறையில் அடைந்து கொள்வதற்கு SWOT பகுப்பாய்வு முக்கியமானதாகும்.

S- Strength (பலம்), W - Weakness (பலவீனம்), O - Opportunities சந்தர்ப்பம்) , T - Threats (அச்சுறுத்தல்)

இதனோடு அடையக்கூடியதான திட்டமிடலை மேற்கொண்டு செயற்படுத்துவதனூடாக நிறுவன பெறுபேறுகளை உரிய முறையில் அடைய முடியும் என்பது உறுதி.

S.திவாகரன்
136/11/com/10

## சர்வதேச நாணய நிதியம்

நிதி தொழில்நுட்ப உதவி வழங்கும், நாணய மாற்று வீதம் சென்மதி மீதி என்பவற்றைக் கண்காணிப்புச் செய்யும் சர்வதேச அமைப்ப சர்வதேச நாணய நிதியம் என அழைக்கப்படும். இதன் பிரதான காரியாலயம் அமெரிக்க ஐக்கியக் குடியரசில் வாசிங்டன் நகரில் அமைந்துள்ளது. இப்பொழுது 185 நாடுகள் இதில் அங்கத்துவம் பெற்றுள்ளன. எல்லா நாடுகளும் IMF ன் கட்டுப்பாட்டுச் சபையில் அங்கத்துவம் பெறுகின்றன. IMF அமைப்பை பின்வருமாறு அறிமுகம் செய்ய முடியும்.

"AN ORGANIZATION OF 185 COUNTRIES WORKING FOSTER GLOBAL MONETARY CO OPERATION, SECURE FINANCIAL STABILITY, FACILITATE INTERNATIONAL TRADE, PROMOTE HIGH EMPLOYMENT AND SUSTAINABLE ECONOMIC GROWTH AND REDUCE POVERTY".

IMF ஆரம்பத்தில் 29 நாடுகளின் உடன்பாட்டுடன் 1945 டிசம்பர் 27 ந் திகதி ஆரம்பமானது. இன்று அதன் அங்கத்துவம் 185 வரை அதிகரித்துள்ளது. அங்கத்துவ நாடுகள் செலுத்தும் அங்கத்துவ பணத்தினால் இதன் நிதி உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டுக்கு கொடுக்கும் கடன் பங்கு (Quota) அந்நாடு பங்களித்துள்ள அங்கத்துவ பணத்தின் விகிதாசாரமாகத் தீர்மானிக்கப்படும். அங்கத்துவ நாடுகளின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு சடுதியான குறுங்காலக்கடனை வழங்குதல் IMF இன் பிரதான கருமமாகக் கருதமுடியும்.

A.T.யுகேந்திரா
160/11/com/30

# பங்குச் சந்தையின் வரலாறு

இலங்கையின் பங்குச் சந்தையானது 1896ம் ஆண்டில் இருந்து செயற்பட்டு வருகின்றது. இது பங்குத்தரகர் சங்கம் எனும் பெயரில் தோட்டத்துறையினர் நிதியீட்டத்தேவையினை நிறைவு செய்யும் முகமாகவே ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் 1904ஆம் ஆண்டில் பங்குத்தரகர் சங்கமானது கொழும்பு தரகர் சங்கம் என பெயர் மாற்றப்பட்டது. பின்னர் கொழும்பு தரகர் சங்கத்திற்கான செயற்பாட்டு விதிகள் 1910 இல் பிறப்பிக்கப்பட்டன.

1984 June வரை வியாபார நடவடிக்கைகளில் கொழும்பு பங்குத் தரகர் சங்கத்தின் மூலம் நடைபெற்று வந்தது. 1984 July 2ம் திகதியில் இருந்து பங்குச் சந்தையின் வியாபாரத்தளம் பொதுமக்களுக்காகவும் தம் முதலீட்டாளர்களுக்காகவும் திறக்கப்பட்டது. இதனை திறந்த கத்தல் (open outcry) முறை எனப்படும். இது ஒரு விற்பனை முறைக்கு ஒத்ததாகும்.

1984 டிசம்பரில் புதிய கம்பனி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுவே உத்தரவாதத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட கொழும்பு பிணைகள் பரிவர்த்தனைக் கம்பனி (Colombo Securities Exchange (GATE) Ltd) ஆகும்.

பின் 1990 March மாதத்திலிருந்து இது தனது பெயரை கொழும்பு பரிவர்த்தனை நிலையம் (Colombo Stock Exchange) என மாற்றிக்கொண்டுள்ளது.

பின் 1991இல் பங்குச்சந்தையில் இரு மாற்றங்கள் நிகழ்ந்தன.
01. மத்திய வைப்புத்திட்ட முறை அறிமுகப்படுத்தப்பட்டமை
02. பிணையங்கள் பேரவை எனும் அமைப்பு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு என மாற்றப்படுத்தப்பட்டது.

பின் 1993இல் இரு பகுதிகளை கொண்ட வர்த்தக அனுமதிச்சீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டமை. பின் 1997இல் முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்ட கணினி திரையை அடிப்படையாக கொண்டு பங்கு வர்த்தக முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

J.ஜெரோம் உமேஸ்
143/11/com/17

# Credit Card

A credit card is a small plastic card to users as a system of payment. It allows its holder to buy goods and services based on the holder's promise to pay for these goods and services. The issuer of the card created a revolving account and grants a line of credit to the consumer (or the user) from which the user can borrow money for payment to a merchant or as a cash advance to the user.

A credit card is different from a charge card: a charge card requires the balance to be paid in full each month. In contrast, credit cards allow the consumers a continuing balance of debt, subject to interest being charged. A credit card also differs from a cash card, which can be used like currency by the owner of the card. Most credit cards are issued by banks or credit unions, and are the shape and size specified by the ISO / IEC 7810 standard as ID - 1. This is defined as 85.60 x 53.98 mm. (3.370 x 2.125 in) ($3^3/8$ x $2^1/8$ in) in size.

M.N.A. Mafras
146/11/com/20

# பேற்றன் உரிமை

பேற்றன் என்பது இறை என அழைக்கப்படும். குறிப்பிட்ட ஒருவருடைய புதிய கண்டுபிடிப்புக்கு அரசு வழங்கும் சான்று பேற்றன் உரிமையாகும். அத்தகைய உரிமைப் பத்திரம் 20 வருடங்களுக்கு செல்லுபடியாகும்.

- புதிய உற்பத்தி முறைகள்
- புதிய இயந்திரம்
- புதிய உற்பத்தி
- மேலே உள்ளவற்றின் சேர்க்கை அல்லது நடைமுறையிலுள்ள கண்டுபிடிப்பை மேம்படுத்தல் என்பவை புதிய கண்டுபிடிப்புக்களாகும்.

**பதிப்புரிமை**

குறித்த நபருடைய ஆக்கஞ்சார்ந்த அலுவல்களை பிரதி செய்யும் உரிமை பதிப்புரிமை எனப்படும்.

- கலை ஆக்கங்கள் (Artistic)
- நாட்டியம் (Dramatic)
- சங்கீதம் (Musical)
- இலக்கியம் (Literary Work)
- கணினிச் செயல்திட்டங்கள் (Computer Programme)
- சமர்ப்பணம் (Performance)
- ஒலிப்பதிவு (Sound Recording) என்பவற்றிற்கு பதிப்புரிமை பெற முடியும்.

பதிப்புரிமையைப் பெற்றால் குறித்த ஆக்கததை பிரசுரம் செய்ய, உற்பத்தி செய்ய, மீண்டும் உற்பத்தி செய்ய , காட்சிப்படுத்த, குத்தகைக்கு வழங்க, மொழிபெயர்க்க அக்குறித்த நபருக்கு பூரண உரிமை கிடைக்கும்.

S.றூபிகா
150/11/com/124

# பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரச் சட்டம்

பாவனையாளர் அதிகாரசபை அதிகாரச்சட்டம் 2003 ஜனவரி 9ம்திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. 2003 மார்ச் 17ம்திகதி இது அத்தாட்சிப்படுத்தப்பட்டதிலிருந்து அமுல் படுத்தப்படுகின்றது.

இப்புதிய சட்டம் அமுலாகையில் பின்வரும் 3 சட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

01. 1979ம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்

02. 1950ம் ஆண்டு விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

03. 1987ம் ஆண்டு நியாயவியாபார ஆணைக்குழுச் சட்டம்

இவற்றை நீக்குவதனால் எவ்வித வெற்றிடமும் உருவாகாது என்று உறுதியுடன் மேற்குறிப்பிட்ட அதிகாரசபைச் சட்டங்களில் வருவன புதிய அதிகாரச் சட்டங்களில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

**அதிகாரச் சட்டத்தின் குறிக்கோள்கள்**

01. பாவனையாளரின் உயிருக்கும், ஆதனத்திற்கும் தீங்கு விளைவிப்பதான பண்டங்களை சந்தைப்படுத்துவதற்கு எதிராக பாவனையாளரை பாதுகாத்தல்

02. இயலுமானவரை பாவனையாளர்களின் நியாயமான விலைகளில் பண்டங்களையும் சேவைகளையும் போதியளவு பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துதல்.

03. நியாயமற்ற வியாபார பழக்கங்கள், வியாபாரிகளால் பாவனையாளர் சுரண்டப்படுதல் என்பவற்றிற்கு எதிராக நிவாரணம் எடுத்தல் என்பனவாகும்.

S.பிருந்தா
158/11/com/29

# கட்டமைப்பு சீராக்கல் கொள்கைகள் (S.A.P)

சர்வதேச உதவி வழங்கும் வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளின் பொருளாதாரத்தினை முன்னேற்றும் வகையில் அந்நாடுகளின் பொருளாதாரக்கொள்கை மாற்றம் அரசாங்க நிறுவன ரீதியான மாற்றம் இணைந்து மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டமாகும்.

**இக்கட்டமைப்புச் சீராக்கல் பொதிகள் பொதுவாக பின்வருவனவற்றை உள்ளடக்கும்**

01. வெளிநாட்டுநேரடி முதலீடுகள், பட்டியல் படுத்தப்பட்ட முதலீடுகள் என்பவற்றை ஊக்குவித்தல்.
02. இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கி வெளிநாட்டு வர்த்தகத்தை தாராளமயப்படுத்தல்.
03. அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல்
04. வரவு செலவுப் பற்றாக்குறையை இயலுமானவரை குறைத்தல்
05. அரச தலையீட்டை அகற்றுவதன் ஊடாக விலைப்பொறிமுறையின் செயற்பாட்டை திறமையாக இயங்கவைத்தல்.
06. தனியார் முதலீட்டுக்கானவாய்ப்புகளை அதிகரிப்பதற்காக உள்நாட்டில் அரசாங்கம் கடன் பெறுதலைக் குறைத்தல்.
07. இறைக்கொள்கை, நாணயக்கொள்கை என்பவற்றை பேரினப் பொருளாதார உறுதிப்பட்டை எய்த பயன்படுத்துதல்
08. நாணயமாற்று வீதத்தில் உயர் பெறுமதியை நீக்குதலும் மிதக்க விடுதலும்.

**S.A.P இன் இலக்குகள் அல்லது பலன்கள்**

01. அதிகளவான வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.
02. நிலைத்திருக்கும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியை ஏற்படுத்துதல்
03. பேரினப் பொருளாதார சமநிலையை ஏற்படுத்துதல்
04. நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்

**S.A.P இன் பிரச்சினைகள் அல்லது பலவீனங்கள்**

01. அரசாங்க தலையீடுகள் குறைக்கப்படுவதனால் அரசின் சமூகநலச் செலவுகள் மானியங்கள் குறைக்கப்படும்.
02. இதனால் வருமானம் குறைந்த வறியவர்கள் பாதிக்கப்படுவர்.
03. பொருளாதார சமமின்னை அதிகர்க்கும்.
04. இறக்குமதி தாராள மயமாக்கலினால் உள்நாட்டு கைத்தொழில்கள் பாதிக்கப்படும்.
05. வேலையின்மை அதிகரித்து மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும்.

திவிஜா பரமராஜா
வர்த்தகம்

# இலங்கையில் வர்த்தகத்துறையில் ஒரு புதிய பரிமாணம்
# www.Kaddai.com

வர்த்தகமும் தகவல் தொழில்நுட்பமும் இன்று இணைந்து பிரிக்க முடியாத ஓர் இணைப்பாக மாறி வருகின்றது. அந்த வகையில் இலங்கையின் வர்த்தகத்துறையில் ஒரு புதிய பரிமாணமாக www.kaddai.com எனும் இணையத்தளம் அறிமுகமாகியுள்ளது.

சம்பத் வங்கி மற்றும் Ace international express (pvt)ltd ஆகியவற்றுடன் இணைந்து செயற்படக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ள அந்த இணைய தளத்தினூடாக விற்பனையாளர்களும் வாடிக்கையாளர்களும் இணைந்து தமது வியாபாரத்தை மேற்கொள்ள முடியும். அதாவது மாடி மனைகள் முதல் சிறிய பொருட்கள் வரை எவராவது ஒருவர் விற்க விரும்பினால் அவர் www.kadai.com இணைய தளத்திலே தான் விற்க விரும்பும் பொருளையும் அதன் விலையையும் பதிவு செய்தல் வேண்டும். இவ்வாறு பதிவு செய்யும் போது www.kaddai.com விற்பனையாளருக்கும் அப்பொருளை வாங்க விரும்பும் வாடிக்கையாளருக்கும் இடையில் ஒரு விற்பனை முகவராக செயற்படும்.

அதுமட்டுமல்லாது நீங்கள் , credit card ஊடாகவும் சம்பத் வங்கி ஊடாகவும் உங்கள் பரிமாற்றத்தை மேற்கொள்ள முடியும். அத்தோடு Ace international express ஊடாக நீங்கள் வாங்கும் பொருட்கள் உங்கள் வீட்டிற்கே கொண்டு வந்து தரப்படும்.

www.kaddai.com ஆனது e-commerce எனப்படும் இணையத்தள வர்த்தகத்தில் ஈடுபடும் ஏனைய இணையத்தளங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதை இணையத்தளம் மூலம் நீங்கள் பொருட்களை வாங்குவது மட்டுமல்லாது விற்க முடியும் என்பதன் மூலம் உணர முடியும்.

மேலும் இந்த தளத்தினூடாக உங்கள் பொருட்களை விற்கவோ அல்லது வாங்கவோ நீங்கள் மேற்கொள்ளும் transaction அல்லது பணப்பரிமாற்றம் மற்றும் உங்கள் நம்பகத் தன்மை என்பன 100% பாதுகாப்பானதாகவும் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு ஏற்ப அமைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் www.kaddai.com மூலம் நீங்கள் உங்கள் பொருளை ஏலம் விடுவது மூலம் உங்கள் பொருளிற்கான உயர்ந்த கேள்வியும் அதிகூடிய விலையும் உங்களுக்கு இலாபமானதாக அமையம் என்பதும் இவ்வாறான online auction வசதியை வழங்கும். இலங்கையின் ஒரே இணையத்தளம் www.kadai.com மூலம் நீங்கள் உங்கள் பொருளை ஏலமிடுவது எமக்கு வரப்பிரசாதமாகும்.

Providence network and solutions என்னும் நிறுவனத்தினால் இயக்கப்படும் kaddai.com உங்கள் தயாரிப்புகளுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளில் அதிக பட்ச கேள்வியையும் உருவாக்கித் தரும்.

T.தனுஷா
132/11/com/06

# இலங்கையில் சிறு வணிகம் தொடர்பாக பல்வேறு வசதிகளை வழங்கும் நிறுவனங்கள்

## 01.ஆலோசனைச் சேவை

- கைத்தொழில் அபிவிருத்திச் சபை
- கைத்தொழில்நுட்ப நிறுவனம்
- ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
- தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனம்.
- இலங்கை வணிக முகாமைத்துவ நிறுவனம்
- தேசிய பொதியிடல் மத்திய நிலையம்
- இலங்கை தர நிறுவனம்

## 02.தொழில்நுட்ப சேவை

- கைத்தொழில் அபிவிருத்திச் சபை
- இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி மையம்
- கைத்தொழில்நுட்ப நிறுவனம்
- இலங்கை குடிசனக் கைத்தொழில் சபை
- தேசிய பொதியிடல் மத்திய நிலையம்
- தேசிய இளைஞர் சேவை மன்றம்

## 03.சந்தைப்படுத்தல் வசதி

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
- இலங்கை குடிசன கைத்தொழில் சபை
- கைத்தொழில் அபிவிருத்திச் சபை

## 04.அடிக்கட்டமைப்ப வசதி

- பிரதேச கைத்தொழில் சேவை மத்திய நிலையம்
- இலங்கை முதலீட்டுச் சபை
- கைத்தொழில் அபிவிருத்தி சபை

## 05.நிதிவசதி

- முயற்சியாண்மை மூலதனக்கம்பனி
- தேசிய அபிவிருத்தி வங்கி
- DFCC
- வணிகவங்கி
- ஸ்மேட் நிறுவனம்

K.சுகன்யா
138/11/com/12

# இன்டர்நெட் கடந்து வந்த பாதை
# (40 வருடங்கள்)

இன்றைய மனித இனத்தின் சிந்தனைப்போக்கை மாற்றியமைப்பதில் Internet க்கு முக்கிய பங்கு உண்டு என்றால் அது மிகையாகாது. தகவல் பரிமாற்றம், உருவாக்கி சேமித்தல் என்ற இரு பரிமாணங்களில் தினந்தோறும் புதிய மாற்றங்களைத்தந்து வரும் இந்த இன்றியமையாத சாதனம் உலகிற்கு வந்து 40 ஆண்டுகள் ஆகின்றன. இது உருவாகி கடந்து வந்த பாதையில் முக்கிய மாற்றங்கள் தந்த சில திருப்பங்களை இங்கு காணலாம்.

1969:- ஆர்பாநெட் என்ற இராணுவப்பணிகளுக்கான நெட் இணைப்பில் இரு கம்பியூட்டர்கள் அர்த்தமில்லாத டேட்டாவினைத் தங்களுக்குள் பரிமாறிக்கொண்டு பிற்காலத்தில் உலகின் வளர்ச்சிக்கான விதையை ஊன்றின. இது செப்டெம்பர் 2 அன்று நடந்தது. 15 அடி நீளமுள்ள கேபில் வழியாக இது சாத்தியமானது.

1972:- Ray Tomlinson என்பவர் Network இல் E-mail பயன்பாட்டினைக் கொண்டு வந்தார். அவர் தான் @ என்ற அடையாளத்தினை E-mail system இல் கொண்டு வந்தார்.

1973:- ஆர்பாநெட்வார்க்கிற்கு பிறநாடுகளில் இங்கிலாந்து மற்றும் நோர்வே நோட் என்னும் இணைந்த சிஸ்டங்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கின.

1974:- TCP என அழைக்கப்படும் Internet புரோடோகால் வகையை Vint cerf மற்றும் Bob khan என்ற இருவர் உருவாக்கிப்பயன்படுத்தினர். இதன் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட நெட்வேர்க்குகள் ஒன்றையொன்று இனம் கண்டு இயங்க முடிந்தது. இது தான் முழுமையான இன்டர்நெட்டின் முதல் இயக்கமாகும்.

1983:-டொமைன்நேம் எனப்படும் இணையதள முகவரிகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஓராண்டு கழித்து .com, .edu, .gov என்ற பெயர்கள் வரையறை செய்யப்பட்டன.

1988:-Morris என்ற வேர்ம் (வைரஸ்) முதன்முதலில் பரவி பல computer களை முடக்கியது.

1989:-இப்போது AOL என அழைக்கப்படும் குவாண்டம் computer services நிறுவனம் அமெரிக்காவில் மேக் இன்டோஷ் மற்றும் ஆப்பிள் computer களுக்கென ஒன்லைன் service ஐத் தொடங்கியது.

இதுவெ 2002 இல் ஏறத்தாழ 3கோடி அமெரிக்கர்களை இணைக்கும் network ஆக மாறியது.

1990:- Tim Bernaslee என்பவர் world Wide Web எனும் அமைப்பினை உருவாக்கினார்.

1993:- Marc Andreesseen என்பவர் Mosai எனும் முதல் Internet Browser ஐ உருவாக்கினார். இதன்மூலம் டெஸ்க்ட் மற்றும் கிராபிக்ஸை ஒரு பக்கத்தில் பார்க்க முடிந்தது. இதனால் இணையப்பக்கத்தினை திறந்து உலகிற்கு காட்ட முடிந்தது.

1994:- Andreessen மற்றும் அவரின் சகாக்கள் வர்த்தக ரீதியாக ஒரு பிரவுசரை உருவாக்க முடிவெடுத்து, நிறுவனம் ஒன்றை அமைத்து நெட்ஸ்கேப் எனும் முதல் பிரவுசரைக் கொண்டு வந்தனர்.

1995:-Amazon.com எனும் இணையத்தளம் தன் கதவுகளை இணைய தளம் வழியே திறந்தது.

1996:-online இல் பாலியல் செய்திகள் இருக்கக்கூடாது என சட்டம் கொண்டு வரப்பட்டது. பின்னர் நீக்கப்பட்டது.

1999:-இசையானது ரெக்கார்டுகள் மற்றும் டேப்கள் வழியே மட்டுமே என்று மாறத் தொடங்கியது. உலகளவில் Internet மக்கள் தொகை 25 கோடியைத் தாண்டியது.

2000:-இணைய நிறுவனங்களின் உயர்நிலை சரிந்தது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் மவுசு குறையத் தொடங்கியது.

2002:- உலக இணைய மக்கள் தொகை 50கோடியைத் தாண்டியது.

2004:-Mark Zuckerberge என்பவர் Face book தளத்தை உருவாக்கினார்.

2005:-Video பைல்களைப் பகிர்ந்து கொள்ள யூட்டியூப்தளம் உருவானது.

2006:- Internet மக்கள் தொகை 100 கோடியைத் தாண்டியது.

2007:- ஆப்பிள் நிறுவனம் வயர்லெஸ் இன்டர்நெட் இணைப்பு வழங்கக்கூடிய ஐ-போனைத் தந்தது.

2008:-Internet மக்கள் தொகை 150 கோடியை எட்டியது சீனாவில் 25 கோடியாக உயர்ந்தது. உலகில் அதிக Internet பயன்படுத்தும் நாடாக சீனா, அமெரிக்காவின் முதலிடத்தைப் பிடித்தது. பிரவுசர்களில் பயர்பாக்ஸ் தன் இடத்தை தொடர்ந்து உறுதிப்படுத்தியது. விமானசேவை நிறுவனங்கள் விமானங்களில் Internet சேவையை வழங்கினர்.

2009:-முழுவதும் Internet லேயே வெளியிடப்படும் தினசரி செய்தித்தாள் seattle post intelligencer வெளியானது.

S.F.நப்லா
152/11com/26

## SLAS - 18 (கணக்கீட்டு நியமம் - 18)

கணக்கீட்டு நியமம் 18 பொறி ஆதனம், பொருத்துக்களின் பெறுமானத்தேய்வும் ஏற்பாடும் தொடர்பாக விளக்குகின்றது.

பெறுமானத்தேய்வு என்பது குறித்த நிலையான சொத்து ஒன்றின் வரலாற்றுக்கிரய பெறுமதியில் இருந்து அதன் எச்சப்பெறுமதியினை நீக்க வருகின்ற பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய பெறுமதியினை அதன் பயன்தரு ஆயுட்காலங்களிடையே யாதாயினும் ஒரு நியாயமான அடிப்படையில் பகிர்வு செய்கின்ற போது அது பெறுமானத்தேய்வு எனப்படுகின்றது.

இங்கு வரலாற்றுக்கிரய பெறுமதி என்பது சொத்து சம்பந்தப்பட்ட கொள்விலை பெறுமதியுடன் கொள்வனவுடன் சம்மந்தப்பட்ட நேரடியான செலவினங்களையும் அச்சொத்தினை பயன்பாட்டு நிலைக்கு மாற்றுவதற்குரிய செலவினங்களையும் உள்ளடக்கியதாகும்.

ஒரு சொத்தின் பயன்தரு ஆயுட்கால முடிவில் அச்சொத்தினை பயன்படுத்தி எவ்வித பயன்பாட்டையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் அச்சொத்து கொண்டிருக்கும் பணப்பெறுமதியை எச்சப்பெறுமதி அல்லது இழிவுப்பெறுமதி என குறிப்பிடப்படுகின்றது. இங்கு சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் என்பது ஒரு சொத்தினை பயன்படுத்தி பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள கூடிய காலம் பயன்தரு ஆயுட்காலம் ஆகும். இது இரு வழிகளில் அளவிடப்படும்.

1. ஆண்டுகளில்
2. வெளியீட்டு அலகுகளில்

ஒரு சொத்தின் பெறுமானத்தேய்வினை நுகர்வின்நன்மை, காலஓட்டம், வழக்கிழப்பு, புதிய கண்டுபிடிப்பு போன்ற காரணிகள் நிர்ணயிக்கின்றன. அத்துடன் நிறுவனத்தில் காணப்படும் அனைத்து சொத்துக்களுக்கும் பெறுமானத்தேய்வு செய்ய முடியாது. அதாவது உற்பத்தி, விநியோக நிர்வாக தேவைகளுக்காக பயன்படுகின்ற கண்ணுக்கு புலப்படக்கூடியதும், ஒருவருடத்திற்கு மேற்பட்ட பயன்பாட்டினைக் கொண்டுள்ளதுமான சொத்துக்களுக்கே பெறுமானத்தேய்வு செய்ய முடியும். அத்துடன் இவை வரையறுக்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

மாறாக மீண்டும் மீண்டும் நுகர்வுத்தேவைக்காக பயன்படுத்தப்படுகின்ற கண்ணுக்கு புலப்படாததும் தொட்டுணர முடியாதும் பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பிட முடியாத சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு

செய்ய முடியாது. அத்துடன் இச் சொத்துக்கள் ஒரு வருடத்திற்கு உட்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கும். SLAS - 18 சார்பான கணக்கீட்டு பிரயோகம் அல்லது கணக்கு வைப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

- நிறுவனம் பெறுமானத்தேய்வு கொள்கையை மாற்றியிருப்பின் அது பற்றி குறிப்பு வடிவில் வெளிப்படுத்த வேண்டும்.

- ஒவ்வொரு ஆண்டு பெறுமானத்தேய்வும் இலாபநட்டக் கணக்கில் அல்லது வருமானக்கூற்றில் முழுமையாக தாக்கல் செய்யப்பட வேண்டும்.

- பெறுமானத்தேய்வு தொகைகள் ஏற்பாட்டுடன் கூட்டப்பட்டு ஐந்தொகையில் வெளிப்படுத்த வேண்டும்.

- பெறுமானத்தேய்வின் எந்தவொரு பகுதியும் இலாப ஒதுக்கங்களிற்கு எதிராக பதிவழிக்கப்படலாகாது.

- சொத்துக்கள் மறுமதிப்பீடு செய்யப்படின் அது குறிப்பிடல் வேண்டும். பின்னர் கணிக்கப்படல் வேண்டும்.

S.தர்சிகா<br>129/11/com/03

# தன்னியக்க வங்கி இயந்திரம்
# Automated Teller Machine

தன்னியக்க இயந்திரம் / தனியாக காசளிப்பு இயந்திரம் எனப்படுவது பணம் வைப்பது, பெறுவது, கணக்கு பார்ப்பது போன்ற பணிகளை வாடிக்கையாளரர்களே செய்ய ஏதுவாக ஒரு கணினி மயப்படுத்தப்பட்ட இயந்திரமாகும்.

இந்தக்கருவி வழமையாக காசாளர்களால் செய்யப்பட்டு வந்த பல பணிகளை இயந்திரமாக்கி தன்னியக்கமாக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் முதன்முதலில் 1967 ம் ஆண்டு ஐக்கிய ராச்சியத்தில் பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டது. இவ்வியந்திரத்தை முதன்முதலில் கண்டு பிடித்தவர் ஸ்கொட்லாந்தை சேர்ந்த "ஜான் ஷெப்பர்ட் பேரோன்" என்பவராவார்.

A.T.M உருவாவதற்கு தூண்டு கோலாக இருந்ததே ஜானின் மோசமான அனுபவம் ஒன்றுதான். அவசரத் தேவைக்காக பணம் எடுப்பதற்கு வங்கிக்கு சென்றார். ஆனால் வங்கியின் நேரம் முடிந்து விட்டதால் அவரால் பணம் எடுக்க முடியவில்லை. இந்த நிகழ்வுக்க வருத்தப்பட்ட ஜானின் மூளையில் உதித்தது ஒரு யோசனை. சாக்லட் வெண்டில் மெசினைப் போலவே பணத்தை பெறுவதற்கு உருவாக்கினால் என்ன என்பதே அவரது யோசனை.

உடனடியாக செயல்படத் தொடங்கிய ஜான் A.T.M ஐ உருவாக்கினார். 1967 ம் ஆண்டு இவர் உருவாக்கிய A.T.M இயந்திரம் இங்கிலாந்தின் வடக்கு லண்டனில் உள்ள "பார்க்லேஸ்" வங்கியில் வைக்கப்பட்டது. அதேபோல் ஆரம்பத்தில் 6 இலக்க ரகசிய குறியீட்டு எண் (PIN) பயன்படுத்தப்பட்டது. அதனை தன்னுடைய மனைவியால் நினைவில் வைத்துக்கொள்ள முடியாததை அறிந்த ஜான் 4 இலக்க பின் (PIN) நம்பரை உருவாக்கி தந்தார் என்பதும் நினைவுகூரத்தக்கது.

எம்.பாத்திமா நஸீபா
வர்த்தகப்பிரிவு (2011/2013)

## வங்கி பிறந்தது எப்படி?

பணத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். திருடனாலோ, தீ விபத்தினாலோ நம்முடைய பணத்துக்கு இழப்பு ஏற்படாதவாறு பாதுகாப்பாக வைத்திருந்து நமக்குத் தேவையான போது தருகின்ற நிறுவனமே வங்கியாகும். இன்றைய வங்கிக்கு முன்னோடியாக இருந்தவர்கள் பொற்கொல்லர்கள். முன்னைய காலங்களில் மக்கள் வெளியூர் செல்லும் முன் தங்கள் நகைகளையும் பணத்தையும் பொற்கொல்லர்களிடம் கொடுத்துப் பாதுகாப்பாக வைத்தனர். அவற்றைப் பாதுகாப்பதற்கு பொற்கொல்லர் அவர்களிடம் சிறிது தொகை கூலியாக வாங்கிக்கொண்டனர். பின்னர் அப்படி வைத்த பணத்தை நம்பிக்கையானவர்களுக்கக் கடன்கொடுத்து வட்டியுடன் சேர்த்துத் திருப்பி பெறலாம் என்று அவர்களிடம் கண்டனர். எனவே தங்கள் கூலி பெறுவதற்கு பதிலாக தங்களிடம் பணம் கொடுத்தவர்களுக்கு வட்டி கொடுக்கலாயினர். இவ்வாறு தொடங்கிய பணச்சேமிப்பும், கடன் கொடுக்கல் வாங்கலும் பின்னர் வங்கி முறையாக உருவானது.

இக்கால வங்கி வெளியூர்களில் செலாவணி செய்ய வசதியாக பயணிகள் காசோலை (Travelers cheque) வழங்குகின்றன. பாதுகாப்புப் பெட்டகங்களில் (Vavults) நம் நகைகளையும், பங்குப்பத்திரங்கள் போன்ற முக்கியமான சான்றுகளையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்கின்றனர். வணிகர்கள் தொழில் போன்றவற்றிற்கு கடன் வழங்குகின்றனர்.

வங்கியில் ஒருவர் பணத்தைப் போட்டு வேண்டும் பொழுது எடுத்துக் கொள்ளலாம். இதற்கு நடப்புக்கணக்கு (Current Account) என்று பெயர். ஒருவர் ஒரு தொகையை நீண்ட காலத்துக்கு இருப்பாக வைத்திருக்க விரும்பினால் அதை அவர் நிலைத்த வைப்பாக (Fixed Deposit) போட்டு வைக்கலாம்.

இதற்கு வங்கி வட்டி தருகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின் திருப்பி பெற்றுக்கொள்வதற்கென வங்கியில் தவணை முறைப்பணம் போடுவதற்கு தொடர் வைப்பு (Recurring Deposit) எனப்பெயர். சிறு சேமிப்புச் செய்கின்றவர்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு (Saving Account) வைத்துக் கொள்ளலாம். இவைக்கு வட்டி உண்டு.

நடைமுறைக்கணக்கு, சில வகை சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்கள் காசோலை மூலம் பணம் பெறலாம். காசோலை என்பது வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒருவருக்கு அல்லது காசோலையை கொண்டு வருபவருக்கு அல்லது குறிப்பிட்ட நபருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்கும்படி அந்த வங்கிக்கு இடும் கட்டளையாகும்.

நம் நாட்டிலுள்ள வங்கிகள் அனைத்திற்கும் தலைமையானதும் வழிகாட்டியாகவும் விளங்குவது மத்திய வங்கியாகும். இதில் பொது மக்கள் கணக்கு வைத்திருப்பதில்லை. இதில் சில வணிக வங்கிகளும் நிதி நிறுவனங்களுமே கணக்க வைத்துக் கொள்ளலாம். நோட்டு அச்சடிக்கும் உரிமையும் இந்த வங்கிக்கு மட்டுமே உடையது.

R.கோசிகா
137/11com/11

## புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள்...

1. கடுமையான பட்டினியினையும் வறுமையையும் ஒழித்தல்
2. உலக அளவில் முதலாந்தர கல்வியினை அடைதல்
3. பால் சமத்துவத்தினையும் மகளிர் வலுவூட்டலையும் ஊக்குவித்தல்
4. குழந்தை இறப்பு வீதத்தைக் குறைத்தல்
5. கர்ப்பிணிகள் சுக நலத்தை முன்னேற்றுதல்
6. எச்.ஐ.வி /எயிட்ஸ், மலேரியா மற்றும் ஏனைய நோய்களை ஒழித்தல்
7. சுற்றுச் சூழலின் நிலைத்து நிற்கும் தன்மையை உறுதிப்படுத்தல்
8. அபிவிருத்திக்கான உலகப் பங்காளிகளை அபிவிருத்தி செய்தல்.

**மூலம்:- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை (2008)**

S.மங்களவாணி
142/11com/16

# தனியார் மயமாக்கல்
# Privatization

தனியார் மயமாக்கல் என்பது முகாமையும், அத்துடன் சொத்துடமையும் அரச துறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றம் செய்வது ஆகும். அரச தொழில் முயற்சிகளை தனியார் மயமாக்குவதில் ஐக்கிய இராச்சியத்தினால் அடையப்பட்ட முன்னேற்றங்களின் பின்னர் 1980 களில் பல நாடுகளின் அதிகரித்த கவனத்தை பெற்று வருகிறது.

இலங்கையில் அரச தொழில் முயற்சிகளின் தொழிற்பாடு காரணமாக வரவு செலவு திட்டத்தின் மீது எழும் பழுவை குறைத்தல் மற்றும் அவற்றின் வினைத்திறனையும், இலாபத்தினையும் மேம்படுத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு தனியார் மயமாக்கல் அரசின் கொள்கையாக 1987 ல் அறிவிக்கப்பட்டது. அவசியமான சட்டம் மற்றும் நிறுவன ரீதியான வரை சட்டங்கள் நிறுவப்பட்டதுடன் நவீனமயப்படுத்தப்படுகின்றன. 1989 இன் பின்னர் 20 பெருந்தோட்ட கம்பனிகள் உட்பட 73 அரச தொழில் முயற்சிகள் மூலமாக 41,997 மில்லியன் திரட்டப்பட்டது.

**தனியார் மயமாக்குவதால் கிடைக்கும் நன்மைகள்**

**அரசாங்கம்:**

1. அரச நிறுவனங்கள் பங்குகளை விற்பதால் பண வரவு செலவு திட்ட பற்றாக்குறையை நிரப்பும்.
2. நிறுவனங்கள் லாபம் ஈட்டும் போது வரி விதிப்பு மூலம் அரசுக்கு வரி கிடைக்கும்.

**தொழிலாளர்:**

1. போட்டி காரணமாக வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.
2. பதவி உயர்வு கிடைக்கும்.

**பாவனையாளர்:**

1. தட்டுப்பாடு இன்றி தாராளமாக பொருள் சேவையை பெறலாம்.
2. நியாயமான விலையில்தரம் கூடிய பொருட்களை பெற முடியும்.

**தனியார் மயப்படுத்தப்படுவதனால் கிடைக்கும் தீமைகள்**

1. அத்தியாவசிய சேவைகள் பாதிப்படைதல்.
2. பொதுமக்களின் நலன் பாதிப்படையும்.
3. தொழிலாளர் வேலைநாள், விடுமுறைநாள், சம்பளம் போன்றவற்றில் சுரண்டப்படுவர்.
4. அரசிடமிருந்து பெற்ற சலுகைகளை தொழிலாளி, பொதுமக்கள் இழக்க வேண்டி ஏற்படும்.

V.கிருஷாந்தி
144/11/com/18

# ஊழியத் தொடர்பு

வணிகம் ஒன்றில் ஊழியர்களின் பங்களிப்பு மிக முக்கியமான ஒன்றாகும். வணிகத்தின் வெற்றி, தோல்விகளில் ஊழியரின் உழைப்பும், வினைத்திறனும், பங்களிப்பும் செல்வாக்கு செலுத்தும். அந்த வகையில் வணிகத்தின் முகாமையாளருக்கும் ஊழியருக்குமிடையே சுமுகமான தொடர்பு காணப்பட வேண்டும்.

ஊழியருக்கும், முகாமையாளருக்கும் இடையிலான இடையறாத உறவு கைத்தொழில் உறவு எனப்படும். இது ஊழியத்தொடர்பு எனவும் கூறப்படும். ஊழியர்கள் தொழிற்சங்கமாக இணைவதால் இந்த உறவு தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் முகாமையாளருக்கும் இடையிலான உறவாக மாறியுள்ளது. இதன்படி இங்கு காணப்படும் தொடர்பு கூட்டுத்தொடர்பாகும். (Collective Relations). ஒவ்வொரு ஊழியருக்கும் முகாமையாளுருக்கும் இடையிலான தொடர்பு ஊழியர் தொடர்பாகக் (Personal Relation) கருதப்படும். இது தனிப்பட்ட உறவாகும். (Individual Relation)

இவ் ஊழியத் தொடர்பின் நோக்கங்களாவன,

1. கைத்தொழில் சமாதானத்தை ஏற்படுத்துதல்

2. கைத்தொழில் ஜனநாயகத்தை உத்தரவாதம் செய்தல்

3. தொழிற் சங்கத்திற்கும் முகாமையாளருக்கும் இடையில் நல்லுறவை வளர்த்தல்

4. விளைதிறனை அதிகரித்தல்

B.T.M.டலீமா
153/11/com/27

# இலத்திரனியல் வங்கி
# E-Banking

தற்போதைய 21 ம் நூற்றாண்டிலே கணினிப்பொறியும் இணையமும் வங்கி நடைமுறைகளில் வரவேற்கத்தக்க மாறுதல்களைக் கொண்டு வந்துள்ளன. இந்த மாறுதல்களை நான்கு வகையாக நோக்கலாம்.

1. கணினிப்பொறி வழியாக வங்கிப்பணி
2. ATM மையங்கள்
3. பண அட்டைகள் (Debit Cards)
4. இணைய வங்கி (Internet banking)

இன்றைய காலகட்டத்தில் வங்கிகள் அனைத்தும் கணினிப்பொறி மயமாக்கப்பட்டுவிட்டன. முன்பு போன்று "பாஸ்புக்" (Pass book) இல்லை. புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை போதும். எப்போது வேண்டுமானாலும் பண இருப்பு, பணப்பரிமாற்றங்கள் பற்றிய அச்சுநகல் (print out) பெறலாம். இன்று வங்கிகளுக்கு இடையில் காசோலைகளைப் பரிமாறிக்கொள்ளும் நடைமுறை கணினிப் பொறி மயமாக்கப்பட்டுள்ளது.

வங்கியில் உள்ள சேமிப்புக் கணக்கில் பணம் வைத்திருந்தால் பணம் தேவைப்படும் பட்சத்தில் அதாவது 24 மணித்தியாலமும் உங்களுக்கு தந்த அடையாள அட்டையினைப் பயன்படுத்தி ATM (Automatic Teller Machine) மூலம் பணத்தைப் பெற முடியும்.

பண அட்டைகள் (Debit Card) உங்கள் கணக்கில் போதுமான பணம் இருப்பின் இவ் அட்டையை இயங்திரத்தில் செருகியதும் உங்கள் கணக்கிலிருந்து பணம் கழிக்கப்பட்டுவிடும். இது பொருட்கொள்வனவிற்கு பயன்படுத்தப்படும்.

தற்போது இணையங்கள் (Computer Net Work) வங்கிகளில் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் ஒரு வங்கியில் கணக்கு வைத்திருந்தால் போதும், வேறெந்த வங்கிலும் நீங்கள் பணத்தை எடுக்க முடியும்.

இதே போன்று எதிர்வரும் காலத்தில் ஒரு வங்கியின் ATM மையத்திலிருந்து வேறோர் வங்கியின் ATM அட்டையின் மூலம் பணத்தை பெறக்கூடிய முறை உருவாகும். அவ்வாறான முறைகள் மூலம் வங்கி மூலமான பணப்பரிமாற்றங்கள், வியக்கத்தக்க முறையில் மாறிவிடும் என்பதில் ஐயமில்லை.

S.பிரதீபா
134/11/com/08

# Leaders And Managers

Recent management literature highlights the fact that the role of leader is very different from the roleplayed by managers. Leaders are responsible for establishing an organizational mission, whereas. Managers are responsible for implementing that mission. The intermediate steps- formulating a strategy for the mission and increasing people's commitment towards it tend to be performed by either leaders or managers. It is these overlapping functions that make the distinction between leaders and managers blurred in actual practice.

| Establish Organizational mission | → | Formulate Strategy for implementing that mission | → | Increase People's commitment and effort toward that mission and | → | Implement Organizational Strategy through others |
|---|---|---|---|---|---|---|

**Leader's role** **Manager's role**

•A leader creates a vision (a lofty goal) to give directions to the organization's activities. In contrast, the key function of the manager is to implement a set of activities that help to accomplish the vision / mission. The manager chooses the means to achieve the end that leader formulates.

•Managers are mainly concerned with order and maintaining the status quo focusing on decision making processes within the organization. Leaders in contrast , are committed to change and constantly search out opportunities for change. Effective leaders are likely to transform their organizations where as managers just manage (or maintain) organizations.

•If these views are taken to their extreme, the leader is an inspirational figure while the manager is a broker at committed to the status quo. However, we must be careful not to understate the importance of management effective leaders have to be good managers themselves, or be supported by effective managers. Without being led as well as managed organization face the threat of extinction in the highly competitive market place of today. In short the difference between leadership and management is one of emphasis. Effective leaders also manage and effective mangers also lead.

M.Priyatharshani
145/11/com/19

## சந்தையில் காணப்படும் தலைவர், பின்பற்றுவோர், சவாலை ஏற்படுத்துவோர் மற்றும் சிறுதுண்ட சந்தைப்படுத்துவோருக்கான பொதுவான தந்திரோபாயங்கள்.
## Generic strategies for leaders, followers, challengers and niches

### சந்தை தலைவர்களுக்கான தந்திரோபாயங்கள்
### Strategies for market leaders

- நிலையைப் பாதுகாத்தல் (Position defense)
- நகரும் பாதுகாப்பு (Mobile defense)
- பக்கப் பாதுகாப்பு (Flanking defense)
- சுருக்குதல் பாதுகாப்பு (Contraction defense)
- வலிந்து தாக்குதல் மூலமான பாதுகாப்பு (Pre - emptive defense)
- எதிர் பாதுகாப்பு (Counter defense)

### சவாலை ஏற்படுத்துவோருக்கான தந்திரோபாயங்கள்
### Strategies for market challengers

- நேரடி மோதல் /தாக்குதல் நெற்றியடி Frontal Attack
- ஒரு பக்க தாக்குதல் Flank Attack
- சுற்றி வளைத்து தாக்குதல் Encirclement Attack
- சுற்றுப்பாதைத் தாக்குதல் Bu pass Attack
- கொரில்லா தாக்குதல் Gorilla Attack

### சந்தை பின்பற்றுவோருக்கான தந்திரோபாயங்கள்
### Strategies for market followers

- மிக நெருக்கமாக பின்தொடர்தல்
- ஒரு இடைவெளியுடன் பின்தொடர்தல்
- தெரிவு செய்து பின்தொடர்தல்

### சிறுதுண்டச் சந்தையாளருக்கான தந்திரோபாயங்கள்
### Strategies for market nichers

- குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் விஷேட கவனம் செலுத்துதல்
- இறுதி நுகர்வோர் வகையில் விஷேட கவனம் செலுத்துதல்
- பொருள்/ பொருள் வரிசையில் விஷேட கவனம் செலுத்துதல்

S.திவ்வியா
135/11/xcom/09

# முயற்சியாண்மையும் சமூகமும்

எமது தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் பொறுப்பை ஏற்கும் முயற்சியாண்மை சமூகத்தின் சுக நலனுக்கு முக்கியமானதாகும்.

புதியது காணும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் எமது வாழ்க்கை தரத்தை அல்லது தொழிற்பாடுகளை உயர்த்துதல் என்பன முயற்சியாண்மை புரிந்து வரும் நாளாந்தச் செய்ற்பாடுகளாகும். தாய் தந்தை இருவரும் தொழிலுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள், வீடு வாசல் சுத்தம் செய்யும் நிறுவனங்கள் உருவாகுதல் வயது முதிர்ந்த சனத்தொகை அதிகரிக்கும் போதுமுதியோர் பராமரிப்பு இல்லம், பொழுது போக்கு நிலையம், விளையாட்டுக்கழகம், சமூகச் சேவை நிறுவனங்கள் உருவாகுதல் என்பன முயற்சியாண்மையின் பிரதி பலன்கள்.

இவையும் மனிதத் தேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்வதில் புது வழி காண்பதற்கான முயற்சிகளேயாகும். முயற்சியாண்மைக்குரிய பணிகளாகும். முயற்சியாண்மை இப் பணிகளில் ஈடுபடுகிறது.

முயற்சியாண்மை எப்போதும் புதிய செயற்பாடுகளை உருவாக்குகிறது. ஒன்றைப்புரிவதில் புதிய வழியைக் காண்கிறது. புதிய பொருள்களையும் சேவைகளையும் சந்தையில் கொண்டு சேர்க்கிறது. தற்போது உள்ளவற்றுடன் புதுமையானவற்றைச் சேர்க்கிறது. அதன் மூலமாக எமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. வாழ்க்கை முறையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துகிறது. விலைமட்டத்தைக் குறைக்கிறது. வணிக நிறுவனங்கள் உருவாகின்ற காரணத்தால் வேலை வாய்ப்புப் பெருகுகிறது. பேதமோ வேறுபாடுகளோ காட்டாது சமூகத்தில் எல்லோரும் வணிகக் கருமங்களில் ஈடுபடத் தூண்டுகிறது. சமூகத்தில் பங்கிடுவதற்கான வெல்வத்தை உருவாக்குவது முயற்சியாண்மை எனச் சுருக்கமாகப் பெறலாம். இது சமூக நலனைத் தோற்றுவிக்கின்றது.

S.நளினி
149/11/com/23

# 2007ம் ஆண்டு கம்பனிச்சட்டத்தின் முக்கியத்துவங்கள்

01. தற்போது கம்பனிச்சட்டத்தின்படி முன்வைக்கப்பட வேண்டிய கூட்டிணைப்பு சான்றிதழ் அல்லது யாப்பு என்பன சம்பந்தமாக கம்பனி அமைப்பு அகவிதிகள் மட்டும் முன் வைக்க முடியுமாக இருத்தல்.

02. அமைப்பு அகவிதிகளுக்கு இலக்குகள் உள்ளடக்குதல் அல்லது சட்ட ரீதியான இலக்குகளை நடைமுறைப்படுத்த முடியுமென பங்குபற்றுனருக்கு தெரிவு செய்யும் விருப்பொன்றிற்கு இடமளித்தல்.

03. தனியான நபரொருவருக்கு கம்பனியை ஆரம்பிக்க வாய்ப்பு கிடைத்தமை.

04. தனிக்கம்பனியல்லாத கம்பனிகளுக்கு தனிக்கம்பனியாக மாறக்கூடியதாக இருத்தல்.

05. தனிக்கம்பனிகளின் தீர்மானம் எடுக்கும் விடயங்கள் இலகுவாக்கப்பட்டமை.

06. கம்பனிப் பதிவாளர் வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே தனிக்கம்பனிகள் கணக்கறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. செலுத்திய பங்கு மூலதனத்தை குறைப்பது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு அவசியமில்லை.

08. குறைந்தளவு பங்குகளை கொண்டோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

09. கணக்குகள் சமர்ப்பிப்பது சம்பந்தமான காலம் ஆறுமாத காலமாக குறைக்கப்பட்டுள்ளது.

10. கணக்கு பரிசோதகர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலோ அல்லது விலகியிருந்தாலோ அவ்வாறான சந்தர்ப்பங்களில் பங்குதாரர் அல்லது கடன் வழங்குனர் தெரிந்து இருக்க வேண்டுமென்ற விடயங்கள் சம்பந்தமாக அவற்றை வெளியிடுவதற்கான விதிமுறைகள் உண்டு.

11. இரு கம்பனிகள் நீதிமன்ற உத்தரவின்றியே ஒன்றிணைக்கப்படலாம்.

12. கம்பனியொன்றின் இயக்குனர்களின் கருமங்கள் உரிமைகள் என்பன தெளிவாகக் காட்டப்பட்டிருத்தல்.

13. மக்கள் கம்பனி இல்லாமலிருத்தலும் அதற்கு பதிலாக பொதுக்கம்பனிகள் சட்ட ரீதியான தன்மைகளை பிரதிநிதித்துவப்படுத்தல்.

14. 1974 ம் ஆண்டு 19ம் இலக்க கம்பனிச்சட்டம் 1975ம் ஆண்டு 9ம் இலக்க வெளிநாட்டு கம்பனிச்சட்டம் என்பவற்றை நீக்கியமை.

T.வினோதினி
131/11/com/05

# திண்மக்கழிவு முகாமைத்துவம்

உலகளாவிய ரீதியில் சூழல் பற்றிய எண்ணக்கரு ஐம்பது வருடத்திற்கு முன் தோன்றியது. அதன் முக்கியத்துவம் இலங்கையில் உணரப்பட்டு 1980ம் ஆண்டளவில் சூழல் அதிகாரசபை உருவாக்கப்பட்டது. இதன் தொழிற்பாடுகள் மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை போன்றவற்றினூடாக மாகாணசபை தமது நிர்வாக கட்டமைப்புக்களை ஏற்படுத்தி மக்களுக்கு சேவை செய்கிறது. மக்கள் தொடர்பான கிராம மட்ட சூழல் பராமரிப்புக்குழுக்கள் அமைப்பதில் எமது அரசாங்கம் ஆர்வம்கொண்டு வருதல் வரவேற்கத்தக்கது.

01. திண்மக்கழிவு தோன்றுதல்
02. கழிவு அகற்றுதல்
03. கழிவு சேகரித்தல்
04. கழிவு பரிகரணம் செய்தல்
05. கழிவு கொண்டு செல்லல்
06. இறுதிக்கழிவு அகற்றல்

கழிவுகளின் பெருக்கம் உயர்ந்து கொண்டு செல்வதனால் ஆபத்தான பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும். எனவே இவ்வகையான நிலைதோன்றாது உற்பத்தியாளரும் நுகர்வோரும் சேர்ந்து செயல்பட்டு கழிவு தோன்றுதலைக் கட்டுப்படுத்த வேண்டும். எமது பிரதேச எண்ணக்கருக்களுடன் சில தீர்வுகளை அணுக முடியும்.

01. சட்டவாக்கம்
02. மக்களை ஊக்குவித்தல்
03. அரசின் பங்களிப்பு
04. கல்வி விழிப்புணர்ச்சி
05. ஒன்றிணைந்த திண்மக் கழிவகற்றல்
06. ஆய்வும் அபிவிருத்தியும்

முகாமைத்துவம் என்பது திட்டமிடல், நிர்வகித்தல், கட்டுப்படுத்தல், வழிப்படுத்தல், ஒத்துழைத்தல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கும். ஓர் நிறுவனத்தின் சீரான வளர்ச்சியில் இரு கண்கள் போல் அமைவது பராமரிப்பு (Maintenance) சீர்ப்படுத்தல் (Improvement) ஆகும். இதனை அனுசரித்துச் செல்வதில் கழிவு முகாமைத்துவம் மிகவும் அவசியம்.

கழிவுகள் திண்மக்கழிவு, திரவக்கழிவு, வாயுக்கழிவு என பிரிக்கப்படும் போது திண்மக்கழிவு ஓர் அடிப்படை அலகாக அமைந்துள்ளது. அதில் இருந்து திரவக்கழிவுகள், வாயுக்கழிவுகள் தோன்ற வழி அமைந்துள்ளது. ஓர் பொருள் மேலும் பாவிக்க முடியாத நிலை தோன்றும் போது அதை கழிவு எனக் கொள்ளலாம். இதனுள் குவியல் நிராகரிக்கப்பட்ட பொருட்கள் (Refuses) கழிவுக்குப்பை (Trash) இடிபாட்டுக்குப்பை (Debris) போன்றன உள்ளடங்கும். இவை ஒட்டு மொத்தக் கழிவு (Waste) திண்மக்கழிவுகள் எனலாம்.

T.சிந்துஜா
127/11com/01

# ISO தரக்குறியீடு சர்வதேச தர ஒழுங்கமைப்பு
## (International Standard Organization)

குறிப்பிட்ட உற்பத்திப்பண்டம் சர்வதேச தரத்தை உடையது என்பதை உறுதிப்படுத்தி சர்வதேச கட்டமைப்பின் ஏற்பாட்டில் வழங்கப்படுகின்றது. ISO என்ற கிரேக்கச் சொல்லின் அர்த்தம் "சமம்" (Equal) ஆகும். சர்வதேச ரீதியாக உற்பத்திப் பொருட்களின் தரத்தை சமப்படுத்துவதற்கான ஒரு முயற்சி எனக்கூறலாம். நுகர்வோர் தேவைகளை நிறைவேற்ற இக்குறியீடு உதவுகின்றது. ISO தரக்குறியீட்டில் பின்வரும் கொள்கைகள் முக்கியம் பெறுகின்றது.

01. திட்டம் (Plan)
02. ஒழுங்குபடுத்தல் (Document)
03. தொடர்பு படுத்தல் (Communicate)
04. அறிக்கையிடல் (Monitor)
05. சீராக்கல் (Modify)

அடிப்படை தரக்குறியீட்டு முறைகளில் ISO 9001, ISO 9002, 9003, 9004 என்பன முக்கியம் பெறுகின்றன.

- ISO 9001- தர உறுதி, வடிவமைப்பு, சேவை, உற்பத்தி, அபிவிருத்தி, நிர்மாணம்.
- ISO 9002- தர உறுதி, உற்பத்தி, நிர்மாணம், சேவை
- ISO 9003- தர உறுதி, இறுதி சோதனையும் பரிசோதனையும்
- ISO 9004- அபிவிருத்தி, முகாமை, வழிகாட்டல், தரமுகாமை, உத்தரவாதம்

### ISO 1400 குடும்பத் தரமுறையின் உள்ளடக்கங்கள்

- ISO 14001 - சூழல் தர முகாமை முறைமை
- ISO 14011 - சூழல் தர ஆய்வ முறைமை
- ISO 14031 - சூழல் பெறுபேறுகளின் கட்டுப்பாடும் மதிப்பீடும்
- ISO 14020/21/24 - சுற்றாடல் குறிகாட்டல்கள்
- ISO 14040/41/42/43 - வாழ்க்கை வட்ட மதிப்பீடு

P.ரோகினி
147/11/com/21

# இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை
# Sri Lanka Inter Bank Payments System (SLIPS)

மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்படும் வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பனவு முறை வணிக வங்கிகளின் பங்குடமை உரிமை கொண்ட வரையறுத்த இலங்கை கிளியர் (தனிப்பட்ட) Lanka clear (PVT) கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிதிச்சட்டத்தின் 112 (ஆ) பிரிவின் படி இலங்கை மத்திய வங்கி இலங்கை கிளியருக்கு காசோலைகளை தீர்வு செய்யும் வசதி வழங்கியுள்ளது. அச் சேவையை செய்வதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி காசோலைகளையும் ஆணைகளையும் வகைப்படுத்தல், பங்கு கொள்ளும் வங்கிகளுக்கிடையில் காசோலைகளையும் ஆணைகளையும் பரிமாற்றல், அவற்றில் குறித்த பெறுமதிகளை தீர்வு செய்து தேறிய மீதியைக் கணித்தல், தேறிய மீதியை மத்திய வங்கிக்கும் ஏனைய வங்கிகளுக்கும் அறிவித்தல் போன்ற தீர்வக சேவைகளை இலங்கை கிளியர் நிறுவனம் நிறைவேற்றுகின்றது. இச் செயற்பாட்டில் காசோலைகள் பௌதீக உருப்படியாகப் பரிமாற்றப்படுதல் வேண்டும். காசோலைத் தீர்வை துரிதப்படுத்துவதற்காக 2005 ஜூன் மாதத்திலிருந்து நிழற் பிரதிக் காசோலை தீர்வக முறை (Image clearing system) அறிமுகம் செய்தல் எதிர்பார்க்கப்பட்டது.

N.மிதிலா
128/11/com/02

## நேரமுகாமைத்துவம்

விஞ்ஞானமானது வியத்தகு வகையில் வளர்ச்சியடைந்த உலகிலே நாம் இன்று சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றோம். கடிதங்கள் மூலம் தகவல்களைப் பரிமாறிய காலம் கடந்து கணனி வலைப்பின்னல்கள் மூலம் தகவல்களைப்பரிமாறும் காலம் கனிந்து விட்டது. சுறு சுறுப்பாக சுழன்று கொண்டிருக்கும் உலகில் வளர்ச்சியடைந்து வரும் கற்கை நெறிகளில் முகாமைத்துவ கற்கையில் இன்று உன்னத நிலையில் காணப்படுகிறது. இதற்குக் காரணம் இன்றைய உலகில் ஒவ்வொரு அம்சங்களிலும் முகாமைத்துவம் முக்கிய இடம் வகிக்கின்றது. அதேபோல் முகாமைத்துவம் முகாமையாளர்களும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கவேண்டிய சூழல் உருவாகியிருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களில் "நேரத்தை உரியமுறையில் பயன்படுத்தல" பிரதான இடம் வகிக்கின்றது. எனவே இச் சவாலை சமாளித்து உரிய இலக்கை வினைத்திறனுடன் அடைய "நேரமுகாமைத்துவம்" பற்றிய அறிவைக் கொண்டிருத்தல் அவசியமானதாகும்.

நேரம் முடிவற்றதொன்றாகும். ஆனால் நாம் ஒவ்வொருவரும் அதனை முடிவுள்ளதாக பங்கிட்டுக் கொள்ள முனைகின்றோம். உலகில் உள்ள திறமைசாலிகள், புத்திசாலிகள், செல்வந்தர்கள், முயற்சியாளர்கள், அறிவற்றவர்கள் போன்ற அனைத்து தரப்பினரும் ஒரு நாளில் 24 மணித்தியாலம், 1440 நிமிடங்கள், 86440 விநாடிகள் அனுபவிக்கலாமே தவிர கூடுதலாகவோ குறைவாகவோ அனுபவிக்க முடியாது. நேரம் என்பது எல்லோருக்கும் சமமாகவே கிடைக்கின்றது. எம்மால் நேரத்தை கட்டுப்படுத்தவோ, அதிகரிக்கவோ, குறைவாக்கவோ, வேகப்படுத்தவோ, வேகத்தைக் குறைக்கவோ அல்லது விரிவுபடுத்தவோ முடியாது. சுருங்கக் கூறின் எம்மால் நேரத்தை முகாமை செய்ய முடியாது. எனவே நேர முகாமைத்துவம் என்பது பொருந்தாத பெயராகவே உள்ளது.

ஆனால் பலநூல்களில், பயிற்சிப்பட்டறைகளில் நேரமுகாமைத்துவம் பற்றி அலசுவதை நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால் அவர்கள் நேரப்பயன்பாடு பற்றித்தான் கவனம் எடுக்கின்றார்கள். நேரத்தை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாக நாம் நேரப் பயன்பாட்டையே முகாமை செய்கின்றோம். இதை நாம் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். நேரத்தை ஒருவர் சிறப்பாக முகாமை செய்வதற்கு மூன்று அடிப்படை விடயங்கள் கருத்திற் கொள்ளவேண்டும்.

அவையாவன: மக்கள், எங்கள் அவயத்திலுள்ள நேரம், ஆவணங்கள் மக்கள் / மனிதர்கள் - எம்முள் பலர் தமது வாழ்நாளில் 33 வீதத்தினை நித்திரையிலும் 33 வீதத்தினை தொழில்சார் நடவடிக்கையிலும் செலவு செய்கின்றனர். ஒரு நாளில் 10 -12 மணித்தியாலங்கள் வேலை செய்தாலும் ஒரு சில மனிதர்களுக்கு அவர்களின் இலக்கை முழுமையாக அடைய முடியவில்லை. எனவே நம் எதிர்கால இலக்குகளை உரிய முறையில்

வகுத்துக்கொள்ளவேண்டும். பின்னர் முக்கியமான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவற்றை உரிய நேரத்தில் செயற்படுத்த வேண்டும். நாம் எமது நேரப் பயன்பாட்டில் "பரிட்டோவிதியை" பயன்படுத்துகின்றோம். எமக்கு மிகவும் முக்கியமான செயற்பாடுகளிற்கு 20% நேரத்தையும், ஓரளவு முக்கியமான செயற்பாடுகளிற்கு 80% நேரத்தையும் பயன்படுத்துகின்றோம். உண்மையில் இதற்கு எதிர்மாறான முறையில் நாம் செயற்பட வேண்டும்.

எங்கள் அவயத்திலுள்ள நேரம் - நாம் சிவப்பு நேரத்தையும், பச்சை நேரத்தையும் கொண்டிருக்கின்றோம். . எம்மால் வீண்விரயம் செய்யப்படும் நேரம் சிவப்பு நேரம் எனவும் எம்மால் பயனுடையதாக முறையில் பணன்படுத்தப்படும் நேரம் பச்சை நேரம் எனவும் கொள்ளப்படும். நேரமுகாமை எனும்பொழுது நாம் சிவப்பு நேரத்தை பச்சை நேரமாக மாற்றிக்கொள்ளவேண்டும். குறிப்பாக காலையில் 04 மணிதொடக்கம் 11மணி வரையும், நடுநிசியின் பின் 02 மணி 04மணி வரையும் மற்றும் இரவுவேளைகளில் 06மணி 10மணி வரையும் சிறந்த உகர்ந்த நேரங்களாகும். எனவே குறித்த ஒரு வேலையைச் செய்ய எமது உடலுக்கும்,மனதுக்கும் எந்நேரமும் உகந்த நேரமாக அமைகிறதோ அந்நேரங்களில் வேலைகளை செய்வதன் மூலம் நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்த முடியும்.

ஆவணங்கள் - எமது சிந்தனைகளை நாம் எழுத்து வடிவில் உருவாக்க வேண்டும். ஆரம்பத்தில் அவை முக்கியமானதாக காணப்பட்டாலும் நீண்டகாலத்தில் அவை நன்மை பயப்பதாகவே அமையும். அதேபோல் ஒவ்வொரு நாள் வேலை முடிந்ததும் உரிய கோவையில் தரவுகளைப் பதிந்து அவற்றை உரிய முறையில் மேசையில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும. இதன் மூலம் தீர்மானம் எடுத்தலின் போதும் வேறு செயற்பாடுகளின் போதும் நேர வீண் விரயம் தடுக்கப்படும்.

உலகில் ஒரு சிறந்த முகாமை சிந்தனையாளர் எனப்புகழ்பெற்ற பீற்றர் றக்கர் (Peter Drucker) கருத்துப்படி நேரம் மிகவும் அருமையான மூலவளம். அதனை சிறப்பாக முகாமை செய்யாவிடின் வேறு எவற்றையும் முகாமை செய்ய முடியாது எனக் கூறி இருக்கின்றார். நேர முகாமைத்துவத்தை சுருக்கமாக விளக்கினால் "அதிகளவு நேரத்தை முதலீடு செய்வதனையும் குறைந்த நேரத்தை செலவு செய்வதனையும்" குறிக்கும்
எனவே கடும்போட்டி நிலவும் உலகிலே நாம் உரிய முறையில் நேரத்தை முதலீடு செய்து அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு எமது இலக்கினை பூரணமாக வினைத்திறனுடன் அடைய முடியும் என்பது உறுதி.

**"I Wasted time now doth time waster me' Richord" நான் நேரத்தை விரயமாக்கினேன். இப்பொழுது நேரம் என்னை விரயமாக்குகின்றது.**

P.சுரேன்
133/11/Com/07

வணிகத்தேடலுக்கு நல்வாழ்த்துக்கள்


**With best complements from**

# Vithus Fancy House

Whole sale & Retailers
School Requirements, Electric goods
Stationaries & Fancy goods



S.Uthyarooban,
Main Street,Mallavi.
077 074 2690



NIMRAN TEX
நிம்ரான் டெக்ஸ்
Dealer in Textiles Items, Fancy Jewelry School Bag Items
Footwear Items & All Others
No. 467/A, Bank Road, Nintavur-14. | Tel: 067 22 51 110, Mob: 077 37 87 519

வணிகத்தேடலுக்கு நல்வாழ்த்துக்கள்

With best complements from



Raja's Cafe & Cool Spot



Main street, Kaluvanchikudy

TP: 065 2251246 / 077 163 1033



With best complements from



எம்.எம்.எஸ்.எலக்ரோனிக் சென்ரர்

M.M.S.Electronic Centre



புதிய பஸ் நிலையம்,
கொடிகாமம்

021 568 4684

New Bus Stand,
Kodikamam.


# Rushitha Key Chain's

## I.M.Sanfarid (San)

**ஒரு அரிசியில் விரும்பிய இரண்டு பெயர்கள்
எழுதி கீடெக் அல்லது பென்ரனில்
கொடுக்கப்படும்.**

Santrinco@gmail.com

T.P: 077 9671668
075 0406946
072 6995405



இலங்கையின் அதிசிறந்த வங்கி
இலங்கையின் அதிசிறந்த வங்கி
Euromoney
2011
இலங்கையின் அதிசிறந்த வங்கி
உலகின் முதற்தர 1000 வங்கிகள் வரிசையில் இடம் பிடித்த இலங்கையின் ஒரேயொரு வங்கி
2011
இலங்கையின் அதிசிறந்த உள்நாட்டு வர்த்தக வங்கி
இலங்கையில் அதிக சர்வதேச விருதுகளை வென்ற வங்கி
இலங்கைக்கு பெருமை சேர்க்கிறது
COMMERCIAL BANK